விலை: 30.00
பக்கங்கள் - 24
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 15 வியாழக்கிழமை (30.07.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 224

## கொரோனா பேரலை

# விரைவில் மீண்டும் உச்சமாக தாக்கும்

### உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை



(ஜெனிவா)
உலக நாடுகள் தற்போது எதிர்கொண்டிருப்பது கொரோனாவின் முதல் அலைதான்.
ஆனால் கொரோனாவின் மிகப்பெரிய அலை மீண்டும் விரைவில் உச்சமாக தாக்கும் என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.(22ஆம் பக்கம் பார்க்க)

## கண்டி வீதி நுணாவிலில் இளைஞனின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)
கண்டி வீதி நுணாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்று புதன்கிழமை காலை இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.
இதில் அதே இடத்தைச் சேர்ந்த 34 22

## 33 கிலோ கஞ்சாவுடன் ஐந்து சந்தியில் ஒருவர் கைது



(யாழ்ப்பாணம்)
33 கிலோ கஞ்சாப் பொதியுடன் ஐந்து சந்திப் பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் பொலிஸா 22

### பிரிந்து வாழும் மனைவிக்கு

## வீடு தேடிச் சென்று கணவரால் சித்திரவதையின் பின் கத்திக்குத்து

(குப்பிளான்)
குடும்பத் தகராறு காரணமாக பிரிந்து வாழும் மனைவியை அவர் 22













வளமிகு
தமிழ் தேசத்தில்
தலை நிமிர்ந்த
தமிழர் வாழ்வே
எமது நோக்கு
இரு தேசம்
ஒரு நாடு
இதுவே எமது இலக்கு
சட்டத்தரணி
விஸ்வலிங்கம் மணிவண்ணன்
அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
(C-172)
X 8


பாராளுமன்றத் தேர்தல் - 2020
(யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்)
"மக்களின் ஆணையே எமக்குத் தேவை
மாற்றத்தைப் பெற்றுத்தருவது எமது பொறுப்பு"
டக்ளஸ் தேவானந்தா
(செயலாளர் நாயகம்-ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி)
5
1
ஐயாத்துரை
ஸ்ரீரங்கேஸ்வரன்
(ரங்கன் தோழர்)
(பருத்தித்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளர்/ கட்சியின் யாழ்.மாவட்ட உதவி நிர்வாக
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி
(ஈ.பி.டி.பி)
X
(C-175)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


வெற்றிபெற வாழ்த்துகின்றோம்
நாடாளுமன்ற தேர்தல்-2020
(யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்)
நம்பிக்கையான
எதிர்காலத்திற்கு...
டக்ளஸ் தேவானந்தா
[செயலாளர் நாயகம் -
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி]
இலக்கம்
05
மருதயினார் ஜெயகாந்தன்
(காந்தன் தோழர்)
இலக்கம்
06
[தவிசாளர் - ஊர்காவற்றுறை]
முடியப்பு றெமீடியஸ்
இலக்கம்
07
[மனித உரிமைகள்
சட்டத்தரணி/ யாழ்.
மாநகர சபை உறுப்பினர்]
X
வாக்களிப்பீர் வீணைக்கு...
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)
குருநகர் கடற்தொழிலாளர் சங்கங்கள்
(C-174)


பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்
வானம் தொடும் வெற்றியை
மீன் சின்னம் காணட்டும்
நாம் வாழும் பூமியை
நம்மவர்கள் ஆளட்டும்!
தன்னாட்சி
தட்சார்பு
தன்னிறைவு
நோக்கிய பயணத்தில்..
3
சுரேஷ் பிறேமச்சந்திரன்
(தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி
இணை ஊடகப் பேச்சாளர்)
(C-162)
தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி


ஜனநாயக
இடதுசாரி
முன்னணி
X
வன்னிக்கு தமிழ் அமைச்சரை உருவாக்குவோம்
அபிவிருத்திகளை
பெற்றுத் தரக்கூடிய
எமது உரிமைகளை
வென்றெடுக்க
முன்னாள் பிரதி அமைச்சர்
தலைவர்
பிரபா கணேசன்
பாலன்
பி.வை.பிரசாத்
4
6
7
வாக்குச் சீட்டில் 12வது இடத்தில் உள்ள சுவர் கடிகார சின்னம்

உழைக்கும் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க
அனைத்து ஒடுக்கு முறைகளைகளையும் எதிர்த்துநிற்க
பட்டத்தை வெல்ல வைப்போம்

சுயேட்சைக் குழு—2



வலி கிழக்கு
பிரதேச சபை உறுப்பினர்
2
கா.கதிர்காமநாதன்



3
மூத்த பொதுவுடமைவாதி
சி.கா. செந்திவேல்

மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணி
(069)

# தொல்பொருட்கள் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்தல்

(கொழும்பு)

தொல்பொருட்களை பாதுகாப்பது தொடர்பில் பொதுமக்கள் உள்ளிட்ட தரப்பினரை தெளிவூட்டும் வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க புத்தசாசன, கலாசார மற்றும் மத விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள தொல்பொருள் பெறுமதிமிக்க பகுதிகளை அண்டி வாழும் மக்கள் மற்றும் நிறுவனங்களை தொடர்புபடுத்திக் கொள்ள எதிர்பார்த்துள்ளதாக அமைச்சின் செயலாளர் எம்.கே.பந்துல ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார்.

புராதன சொத்துகளின் பெறுமதி மற்றும் அதன் தொல்பொருள் பெறுமதி தொடர்பில் பொது மக்களை தெளிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப் படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஐ-4)

பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்.மாவட்டம்



"இரண்டு தேசங்கள் ஒரு நாடு"



நடராஜர்
காண்டீபன்
(சட்டத்தரணி)
சட்ட ஆலோசகர்,
தமிழ் தேசிய மக்கள் முன்னணி
(அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)



(C-159)

2 4 10

தாயகம் - தேசியம் - சுய நிர்ணய உரிமை

# நாட்டில் இதுவரை ஒரு இலட்சத்து 55 ஆயிரம் பி.சி.ஆர்.பரிசோதனைகள்

(கொழும்பு)

பெப்ரவரி மாதத்திலிருந்து இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் ஒரு இலட்சத்து 55 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நேற்றைய தினம் மாத்திரம் நாட்டில் ஆயிரத்து 349 பி.சி.ஆர்.சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுவரை நாட்டில் மொத்தமாக ஒரு இலட்சத்து 55 ஆயிரத்து 540 பி.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஐ-4)

பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்



1
அங்கஜன் இராமநாதன்
B.Sc. (Eng), MBA (International).

சர்வதேச அரசியல் சதுரங்கமும்
தமிழர்களின் தலைவிதியும்!



சர்வதேச ஆதிக்க சக்திகளின் இலங்கை மீதான ஆதிக்கப் போட்டியின் சதுரங்க விளையாட்டின் காய் நகர்த்தலுக்கு பலியாகியது இலங்கை வாழ் மக்கள் என்பது தெளிவு. ஏற்கனவே இலங்கையில் தீர்க்கப்படாதுள்ள சிறுபான்மைத் தமிழர்களின் அரசியல் உரிமைப் பிரச்சினையை கையிலெடுத்து தமது நலன்களுக்காகப் பயன்படுத்தினர். மேலும் பயன்படுத்துவார்கள் என்பதனை எமது தமிழ் அரசியல்வாதிகள் புரிந்துகொள்ளவில்லையா?

74% சிங்களப் பெரும்பான்மையினம் இருக்கும் எம் நாட்டில் தமிழர்கள் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி சிங்கள ஜனாதிபதியின் ஆட்சியில்தான் எந்தக் காலத்திலும் இலங்கை அரசாங்கம் இயங்கும் என்ற உண்மை யதார்த்தத்தை மக்களாகிய நாங்கள் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

- காணாமற் போனவர்களை 60 நாள்களில் கண்டுபிடிப்பதற்குரிய வழிமுறைகளை ஆராய்ந்து, அதற்கொரு முடிவை ஏற்படுத்தி, அந்தக் குடும்பத்தின் பிரச்சினைகளைக் கண்டறிந்து, அவர்களுக்கேற்ற தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
- பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்துக்கும் கல்விச் செலவுக்கும் மாதாந்தம் 40 ஆயிரம் ரூபா பணத்தை வட்டியில்லாமல் வழங்கி 10 - 20 வருட அடிப்படையில் அவர்களுடைய பிள்ளைகள் வளர்ந்த பின்னர் மீளச் செலுத்துவதற்குரிய திட்டங்களை பரிந்துரைத்தல்.
- சப்த தீவக பூமிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் மக்களின் காணிகளின் பெறுமதி பல லட்சம் ரூபா, தீவகத்தில் உள்ள காணிகளின் மிகப் பெரிய அளவிலான விலை அதிகரிக்கும் என்பதை உறுதியாகக் கூறுகின்றேன்.
- தமிழீழ வைப்பகத்தில் அடகு வைத்த தங்க நகைகளை மீட்பதற்கு அல்லது நஷ்டஈடு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல்.
- 5 இலட்சத்துக்கு உட்பட்ட நுண்கடன்களை இல்லாது ஒளித்தல்.

மேலே கூறப்பட்ட சகல திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு எங்கள் கை சின்னத்துக்கு வாக்களிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.



பரநிருபசிங்கம்
வரதராஜசிங்கம்
(விண்ணன்)

கை சின்னத்துக்கும் அங்கஜன் இராமநாதன் அவர்களின் வெற்றி இலக்கம் 1 இற்கும் எனது வெற்றி இலக்கமாகிய இலக்கம் 5 இற்கும் வாக்களித்து உங்கள் வெற்றியை நிலைநாட்டுங்கள்!

"உங்கள் வாக்கு உங்கள் உரிமை
சரியான முறையில் வாக்களியுங்கள்!"

ஆளும் கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆட்சியில் இருக்கப்போகும் கட்சியான எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய அபிவிருத்திக்கு வித்திடுங்கள்.

5

தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க.
facebook.com/vinnan05
(C-170)
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி

# உலக நாடுகளின் கடன் நிபந்தனைகள் தொடர்பில் விசேட கவனம் அவசியம் - அகிலவிராஜ்

**(கொழும்பு)**

**இந்தியா, சீனா உள்ளடங்கலாக எந்த நாடுகளிடம் கடன்களைப் பெற்றாலும் அவற்றுக்காக விதிக்கப்படுகின்ற நிபந்தனைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். அத்தகைய நிபந்தனைகளையும் வட்டி வீதங்களையும் கருத்திற்கொண்டே நாம் ஆட்சியிலிருந்த போது கடன்களைப் பெற்றோம். அந்தவகையில் வெளிநாடுகளிடமிருந்து பெறப்படும் கடன்களைப் பொறுத்தவரையில் தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் சரியானவை என்று நாம் கருதவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.**



இலங்கையின் வெளிநாட்டு நாணய ஒதுக்கைப் பாதுகாப்பதற்காக இந்திய ரிசேர்வ் வங்கியினால் வழங்கப்பட்டுள்ள 400 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேலதிகமாக இருதரப்பு பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையின் கீழ் மேலும் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கொவிட் - 19 கொரோனா வைரஸ் பரவல் காரணமாகப் பாதிப்படைந்திருக்கும் இலங்கையின் வெளிநாட்டு நாணய ஒதுக்கைச் சீர்செய்வதற்காக இந்தியாவிடமிருந்து 1.1 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரியிருந்தார்.

அதேபோன்று மறுபுறம் சீனாவிடமும் இலங்கை பல்வேறு கடனுதவிகளைப் பெற்றிருப்பதுடன், அண்மைக்காலத்தில் கொரோனா வைரஸ் பரவலுக்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளில் இலங்கைக்கு உதவும் வகையில் சீனா பல்வேறு மருத்துவப் பாதுகாப்பு உபகரணங்களை நன்கொடையாக வழங்கி வந்தது.

இத்தகையதொரு பின்னணியில் இலங்கை அரசாங்கம் இந்தியா மற்றும் சீனாவிடமிருந்து கடனுதவிகளைப் பெறுவதனால் நாடு பாரிய கடன்பொறிக்குள் சிக்கும் நிலையேற்படும் என்றும், அவற்றை மீளச்செலுத்துகையில் பொருளாதார ரீதியில் நெருக்கடி நிலையை எதிர்கொள்ள வேண்டியேற்படும் என்றும் எதிர்த்தரப்புக்கள் எச்சரித்து வருகின்றன.

இதுகுறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என்னவென்று வினவியபோதே அகிலவிராஜ் காரியவசம் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் கூறுகையில், எந்த நாடுகளிடமிருந்து கடன்களைப் பெற்றாலும், அவற்றைப் பெறுவதற்கான நிபந்தனைகள் மிகவும் முக்கியமானவையாகும்.

அந்த நிபந்தனைகள் நாட்டிற்கு நன்மையானவையா? அல்லது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவையா? என்பது குறித்து விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

அந்தவகையில் எமது அரசாங்கத்தில் பெரும்பாலும் நாட்டிற்குப் பாதிப்பை ஏற்படுத்தாத கடன்களையே பெற்றிருக்கின்றோம்.

அதேபோன்று அந்தக் கடன்களைப் பெறுவதற்கான நிபந்தனைகள் மற்றும் செலுத்த வேண்டிய வட்டிவீதம் தொடர்பிலும் அவதானம் செலுத்துவோம்.

இந்நிலையில் கடன் பெறுவனவுகளைப் பொறுத்தமட்டில் தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் சரியானவையாக எமக்குத் தோன்றவில்லை. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்றவற்றிடம் கடனுதவிகள் அல்லது நிவாரண உதவிகளைப் பெறமுடியும்.

எனினும் தற்போதைய அரசாங்கத்திற்கு அத்தகைய கடன்களைப் பெறக்கூடிய வாய்ப்பு இல்லையென்றே தோன்றுகிறது என அவர் தெரிவித்தார். (ஜ-4)






## மேலுமொரு ஆலோசகருக்கு கொரோனா

(கந்தகாடு)

கந்தகாடு புனர்வாழ்வு மையத்தில் ஆலோசகர் ஒருவர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவருக்கு நடத்தப்பட்ட இரண்டாவது பி.சி.ஆர். பரிசோதனையில் அவர் வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

அதன்படி, அதிகாரியுடன் தொடர்புடைய ஹிங்குரான, முவாங்கொல கிராமத்தின் சில குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

ஹிங்குரானவின் ஒரு பகுதியிலிருந்து கல்மடுவ வரையிலான பகுதிகளில் மேலதிக வகுப்புகள், அரசியல் கூட்டங்கள் மற்றும் பிற விழாக்கள் நடத்துவதை நிறுத்துமாறு சுகாதாரத் துறை பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. (ஜ-4)

## மாடுகளை வேட்டையாடும் புலிகள்



(குருமன்காடு)

வவுனியா, ஓமந்தை நாவற்குளம் பகுதியில் மேய்ச்சலுக்குச் செல்லும் மாடுகளை புலி வேட்டையாடி வருவதாக அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, ஓமந்தை, நாவற்குளம் பகுதியில் குடிமனைகளை அண்டியதாக உள்ள சிறிய காட்டுப் பகுதிக்குள் சிறுத்தைப் புலிகள் நடமாடுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

காட்டுப் பகுதியை அண்மித்த பகுதிகளில் மேய்ச்சலுக்காக செல்லும் மாடுகளை வேட்டையாடி உணவாக உட்கொள்வதாகவும் ஒரு வருட காலத்தில் 37 மாடுகள் புலிகளினால் இரையாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள மக்கள் சில நாட்களில் ஒரேநாளில் 5 மாடுகள் வேட்டையாடப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் புலிகளின் நடமாட்டத்தை அவதானிக்க முடியும் எனவும் அச்சுறுத்தலால் தமது கால்நடைகளை வளர்க்க முடியாதுள்ளதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அப்பகுதி கால்நடை வளர்ப்போர் கவலை வெளியிட்டுள்ளனர். (4-5-250)

# இராசிபலன்

30.07.2020
ஆடி 15, வியாழக்கிழமை
ஏகாதசி பின்னிரவு 1.09 மணிவரை
அனுசம் முற்பகல் 9.48 மணிவரை
சுபநேரம் 7.33-9.03 மணிவரை
இராகுகாலம் 1.33-3.03 மணிவரை
சந்திராஷ்டமம் பரணி
ஏகாதசி விரதம்

வளவன்

**மேஷம்:** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**ரிஷபம்:** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், தொல்லைகள் குறையலாம், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்:** வியாபார விருத்தியுண்டு, அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், நன்மைகள் நடைபெறும் நாள்.

**கடகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, மற்றவர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**சிம்மம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி:** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள்.

**துலாம்:** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், வங்கி சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள்.

**விருச்சிகம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.

**தனுசு:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், உடல் நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**மகரம்:** பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்:** என்றோ நடக்குமென நினைத்த காரியமொன்று இன்று நடைபெறலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**மீனம்:** தடைகள் விலகி தனவரவுகள் கிடைக்கும் நாள், எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

வளர்ச்சி இருக்கும் இடத்திலே இழப்பு இருக்கும்




# அரச பாடசாலைகளுக்கு தேர்தலை முன்னிட்டு நான்கு நாட்கள் விடுமுறை

(கொழும்பு)

**இந்த வருடம் பொதுத்தேர்தல் இடம்பெறும் வாரத்தினுள் நான்கு நாட்கள் நாட்டில் அனைத்து அரச பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும இதனை அறிவித்துள்ளார்.**



அந்த வகையில், எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 4, 5, 6 மற்றும் 7 ஆம் திகதி வரை பாடசாலைகளை மூட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து பாடசாலைகளும் 11, 12, 13 ஆம் தர மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக கடந்த 27 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப் பட்டிருந்தது.

எனினும் ஏனைய தர மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் பத்தாம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள 11, 12, 13 ஆம் தர மாணவர்களுக்கே தேர்தலை முன்னிட்டு வழங்கப்படும் விடுமுறை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# தவறு செய்பவர்களுக்காக நாட்டின் சட்டங்களை திருத்தும் அரசாங்கம்

(கொழும்பு)

தவறு செய்பவர்களை காப்பாற்றுவதற்காக நாட்டின் சட்டங்களை திருத்துவதற்கு அரசாங்கம் முயற்சி செய்கின்றது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் பொருளாதாரம் மற்றும் சட்டம் ஒழுங்கு நிலைமை தொடர்ந்து மோசமடைந்து வருகின்றது.



சட்டத்தின் ஆட்சியை முற்றாக புறக்கணிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் காரணமாக மக்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர்.

முக்கிய அரசாங்க பிரமுகர் ஒருவர் அண்மையில் தேர்தல் சட்டங்களையும் போக்குவரத்து விதிகளையும் மீறி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

மேலும், குருநாகலில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டடத்தை தரைமட்டமாக்கிய நபர் தண்டிக்கப்படவில்லை.

அத்துடன் தற்போதைய அரசாங்கமும் விவசாயிகளின் அவலநிலையை புறக்கணித்துள்ளன என குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)

## வாக்களிப்பது உங்கள் உரிமையும் பொறுப்புமாகும்

கொரோனா (Covid 19) அச்சமின்றி பாதுகாப்போடு வாக்களிப்போம்

### வாக்களிப்பு நிலையத்தின் பாதுகாப்பு முன்னேற்பாடுகள்

- ♦கொரோனா (Covid 19) நோய் பரவலைத் தடுப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள்.
- ♦நிலைய வளாகம் தொற்று நீக்கம்.
- ♦கைகளை கழுவுதல்
- ♦சமூக இடைவெளி பேணுதல்.
- ♦தொடுகையின்றி ஆவணங்களை பரிசோதித்தல்
- ♦அழியாத மை பூசுவதற்கு தனித்தனியாக தூரிகை பயன்படுத்தல்.
- ♦வாக்களிக்க முன்னரும் பின்னரும் கைகளை தொற்று நீக்குதல்
- ♦வாக்களிப்பு சிற்றறையை அடிக்கடி தொற்று நீக்குதல்.
- ♦சொந்த பேனாவை எடுத்து வந்து வாக்களித்தல் / தொற்று நீக்கப்பட்ட பேனாவைப் பயன்படுத்தல்.

### 2020 ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி

- ❖நேர காலத்துடன் சென்று வாக்கை அளியுங்கள்.
- ❖கட்டாயமாக முகக்கவசம் அணிந்து செல்லுங்கள்.
- ❖சமூக இடைவெளியைப் பேணுங்கள்.
- ❖ஏற்றுக்கொள்ளப்பட்ட அடையாள அட்டை ஒன்றினைக் கட்டாயமாக எடுத்து செல்லுங்கள்.
- ❖வாக்காளர் அட்டையை எடுத்துச் செல்வது வாக்களிப்பினை இலகுவாக்கும்.
- ❖கறுப்பு / நீல நிற பேனா ஒன்றினை எடுத்துச் செல்லுங்கள்.
- ❖தேவையற்ற பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டாம்.

*"வாக்குரிமையை பாதுகாப்போம் பாதுகாப்பாக வாக்களிப்போம்"*

தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்


# 24 கரட் தூய தங்கத்தின் விலை ஒரு லட்சத்தைத் தாண்டியது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று (ஜூலை 29) புதன்கிழமை தூய தங்கத்தின் விலை வரலாற்றில் முதல் தடவையாக ஒரு இலட்சத்து 4 ஆயிரம் ரூபாயை எட்டியுள்ளது. உலகளவில் கடந்த எட்டு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு தங்க விலை உயர்வு இவ்வாண்டு ஜூன் மற்றும் ஜூலை மாதத்தில் பதிவாகியுள்ளது. தங்கம் விலை கடந்த சில மாதங்களாகவே உச்சத்தில் இருந்து வரும் நிலையில் தற்போது ஆடி மாதம் வந்துள்ளதால் விலை குறையும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் தங்கத்தின் விலை உயர்ந்துள்ளது. பாதுகாப்பு கருதி தங்கத்தில் முதலீடு செய்வதால் தங்கத்தின் தேவை அதிகரித்து அதன் விலை உயர்ந்து வருகிறது. கொரோனா வைரஸ் பாதிப்பால் தொழில் துறை தேக்கம் குறித்த பீதி நிலவி வரும் நிலையில், தங்கம் விலையில் தற்போது ஏற்ற இறக்கங்கள்நிலவிவருகின்றன. இந்தநிலையில் தங்கம் விலை அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணத்தில் நேற்று (ஜூலை 29) ஒரு பவுண் ஆபரணத் தங்கம் (22 கரட்) 95 ஆயிரத்து 350 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் (28) 94 ஆயிரத்து 400 ரூபாயாக காணப்பட்டது. நேற்று 24 கரட் தூய தங்கத்தின் விலை பவுணுக்கு ஒரு இலட்சத்து 4 ஆயிரம் ரூபாயாக விற்பனை செய்யப்பட்டது. நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தூய தங்கம் ஒரு லட்சத்து 3 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-8)

# கார் சைக்கிள் விபத்து

## ஒருவர் படுகாயம்

(அராலி)

அராலி மேற்குப் பகுதியில் சைக்கிள் மற்றும் கார் மோதிய விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று அராலி மேற்குப் பகுதியில் இடம்பெற்ற இவ்விபத்தில் அதே பகுதியைச் சேர்ந்த வரதராசா நிதுசன் (வயது-19) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார். காயமடைந்த இளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கார் இளைஞனை மோதிவிட்டு வீதியை விட்டு விலகி மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.

காரின் சாரதியை வட்டுக்கோட்டைப் பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-5-104)



# பாடசாலைகளை அண்மித்த பகுதிகளில் சீரற்ற வீதிகளின் விபரம் திரட்டல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயம், சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாடசாலைகளை அண்மித்து மாணவர்களின் போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கும் வீதிகளின் விபரத்தை தென்மராட்சிக் கல்வி வலயம் சாவகச்சேரி பிரதேசசபையிடம் கோரியுள்ளது.

அண்மையில் சாவகச்சேரி பிரதேசசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே பிரதேசசபை செயலாளர் இது தொடர்பாக உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தினார்.

கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் ஊடாக புனரமைப்புச் செய்வதற்காக பாடசாலை மாணவர்கள் அதிகம் பயன்படுத்தும் அல்லது பாடசாலைக்கு மிக அருகாமையில் பயணிக்க இயலாத நிலையில் சேதமடைந்திருக்கும் பிரதேச சபைக்குச் சொந்தமான வீதிகளின் விபரங்கள் பிரதேச சபையிடம் கோரப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள்ளிருக்கும்வீதிகளை இனங்கண்டு விபரங்களைத் தருமாறு கல்வி வலயம் கோரியுள்ளது.

அதனடிப்படையில் சாவகச்சேரி பிரதேச சபையினர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் சபை உறுப்பினர்களின் உதவியுடன் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்திற்கு இடையூறாகக் காணப்படும் வீதிகளை இனம்காணும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

49 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிய சாவகச்சேரி பிரதேசசபை கடந்த காலங்களில் கம்பெரலிய,சபை நிதி மற்றும் ஏனைய நிதி மூலங்கள் ஊடாக அதிகளவான வீதிகளைச் செப்பனிட்ட போதிலும் இன்னமும் பெரும்பாலான வீதிகள் புனரமைக்கப்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5-30)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வட்டுக்கோட்டை - வெப்பட்டியொல்லை செந்தில் முருகையா (ஈழத்து திருச்செந்தூர்) திருக்கோயிலின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாட்கள் பகல் - இரவு திருவிழாக்களாக இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும் மறுநாள் 12 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என ஆலய அறங்காவலர் சபையினர் தெரிவித்துள்ளனர். (5-8)

# நல்லூரில் பொலிஸாருக்குப் பதில் இராணுவத்தினர்

(யாழ்ப்பாணம்)

பொதுத் தேர்தலை முன்னிட்டு நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழாவில் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ள பொலிஸாரில் மூன்றில் இரண்டு பகுதியினர் அடுத்த வாரம் மீளப்பெறப்பட்டு பொலிஸாருக்குப் பதிலாக இராணுவத்தினர் அதிகளவில் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

ஒரு வாரத்துக்கு இந்த நடைமுறை அமுலில் இருக்கும். நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழா கடந்த 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது.

எதிர்வரும் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு வரும் 3 ஆம் திகதி தொடக்கம் பொலிஸார் தேர்தல் கடமைக்கு அமர்த்தப்படவுள்ளனர்.

ஆகையினால் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் திருவிழாவில் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ள பொலிஸாரில் மூன்றில் இரண்டு பகுதியினர் மீளப்பெறப்பட்டு இராணுவத்தினர் அதிகளவில் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இந்நிலையில் ஒருவார காலத்துக்கு இந்த நடைமுறை இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-8)



வடமராட்சி வல்லிபுர ஆலயத்தில் நாடு கொரோனா நோய்த் தாக்கத்திலிருந்து விடுபட வேண்டி விசேட அபிஷேகம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இவ் அபிஷேகத்துக்காக பருத்தித்துறை கோட்டுவாசல் அம்மன் ஆலயத்திலிருந்து வல்லிபுர ஆழ்வார் ஆலயம் வரை பாற்குடப்பவனி இடம்பெற்றது.(படம்:- கரணவாய் செய்தியாளர்)

# அச்சுறுத்தி கைது செய்யும் நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் கைவிட வேண்டும்

## சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை

(கொழும்பு)

**சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்கள் உள்ளிட்டோரை அச்சுறுத்தி கைது செய்யும் நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டுமென சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.**

நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே சர்வதேச மனித உரிமை அமைப்புகள் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளன.

இவ்விடயம் தொடர்பாக சர்வதேச மனித உரிமை அமைப்புகள் மேலும் தெரிவித்துள்ளதாவது. "அரச சார்பற்ற செயலகம் உட்பட பல அமைப்புகள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

மேலும் பாதுகாப்பான ஒழுக்கமான நாட்டை உருவாக்குவதற்கான ஜனாதிபதி செயலணிகள் போன்றன நியமிக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஓய்வுபெற்ற பாதுகாப்பு அதிகாரிகள் உயர் பதவிகளுக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இது நாட்டை இராணுவமயப்படுத்துவதை நோக்கிய ஆபத்தான போக்காகும்.

ஜனாதிபதி உட்பட தற்போதைய அரசாங்கத்திலுள்ள பலர், உள்நாட்டு யுத்தத்தின் போது யுத்தக்குற்றங்களில் ஈடுபட்டவர்கள்.

சட்டத்தரணிகள், பத்திரிகையாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், கடந்த காலத்தில் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள், மாற்றுக்கருத்துடையவர்கள், பொலிஸார், புலனாய்வு அமைப்பினர் மற்றும் அரச ஊடகங்களினால் இலக்கு வைக்கப்படுகின்றனர்.

இவ்வாறு தற்போது அச்சத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. எனவே அனைத்து இலங்கையர்களினதும் மனித உரிமைகளை மதிக்குமாறும் பாதுகாக்குமாறும் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் இலங்கைக்கு நிதி வழங்கும் சமூகம் வேண்டுகோள் விடுக்கவேண்டும்" என அந்த அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. (ஐ-4)

# தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு மேலதிகமாக ஒரு திகதி வழங்கப்படாது



(அநுராதபுரம்)

அநுராதபுரம் மாவட்டம் இராஜாங்கனைத் தேர்தல் பிரிவில் நேற்றுத் தபால்மூல வாக்களிப்பு இடம்பெற்றது.

மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 5 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம்பெற்றதாக அநுராதபுர மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி ஆர்.எம்.வன்னிநாயக்க தெரிவித்தார்.

இந்த வாக்களிப்பு நேற்றுக் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை இடம்பெற்றதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர்கள் வாக்களிக்க பிரத்தியேக நாள் வழங்கப்படாது எனத் தேர்தல்கள் செயலகத்தின் பணிப் பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். பொதுத்தேர்தல் நடைபெறும் தினத்தன்று மாலை 5 மணிக்குப் பின்னர் அவர்களுக்கு வாக்களிக்க சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஐ-4)

# குணமடைந்தோர் 2317

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியானவர்களில் மேலும் 21 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அந்தவகையில் இதுவரை குணமடைந்து வெளியேறியவர்களின் மொத்த எண்ணிக்கை 2317 ஆக அதிகரித்துள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

2810 பேருக்கு இதுவரை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் தற்போது 482 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை கொரோனா வைரஸ் தொற்றினால் 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)




கொக்குவில் நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

**வரலக்ஷ்மி காப்பு**

31.07.2020 வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு அம்பாளுக்கு விசேட பூசைகள் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து திருவிளக்குப் பூசையும் காப்புக் கட்டலும் இடம்பெறும்.

வரலக்ஷ்மி காப்புக் கட்ட விரும்புபவர்கள் தமது பெயர்களை முற்கூட்டியே ஆலய காரியாலயத்தில் பதிவு செய்யவும்.

ஆலய பரிபாலன சபையினர்.

(3437)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 3
கி.பா: 38¼ செவ்7இல் உயரம்:5'10''
தகைமை/தொழில்:MBA, SLAS, SLEAS, Bank Assistant Manager (Gov)
எதிர்பார்ப்பு: தகுந்த வரன்
தொ.இ: B/11001

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 84செவ் 2இல் உயரம்:5'6''
தகைமை/தொழில்: பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: உத்தியோகமுள்ள தகுந்த வரன்
தொ.இ: B/11002

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 4
கி.பா: 71செவ் 4இல் உயரம்: 5'6''
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. மோட்டார் உதிரி பகுதி கடை (சொந்தம்)
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் உள்ள பெண்
தொ.இ: B/11004

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 4
கி.பா:68 சூரி, செவ்11இல்
உயரம்:5'7''
தகைமை/தொழில்: P.H.D. சிரேஷ்ட விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
மணமகன் விவாகரத்தானவர்
தொ.இ: B/11006

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: செவ் 12 இல் உயரம்: 5'6''
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Lecturer போன்ற வரன்
தொ.இ: G/11005

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா: 36செவ் 3 இல் உயரம்:5'6''
தகைமை/தொழில்: B.Sc (Computer science) முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகம் உள்ள மணமகன்
தொ.இ: G/11007

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 2
கி.பா: 14¾ சூரி,செவ் 5இல்
உயரம்: 5'6''
தகைமை/தொழில்:Diploma in IT, Project Co-ordinator in Finance Ministry (Gov)
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant
தொ.இ: G/11008

பிறப்பு: 2001 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 4
கி.பா: 26½ செவ் 4 இல் உயரம் 5'2''
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: வெளிநாட்டு வரன்
தொ.இ: G/11009

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

# முல்லைத்தீவில் பல்கலைக்கழகம் விரைவில்

## மன்னாரில் வட மாகாண ஆளுநர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் பல்கலைக்கழகம் விரைவில் அமைக்கப்படவுள்ளதுடன் அதற்கு மாணவர்களை உள்வாங்குவதற்கு பிரத்தியேக முறை பின்பற்றப்படவுள்ளதாகவும் வடக்கு ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார். 'அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' எனும் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மன்னார் பரிகாரக்கண்டல் அரச தமிழ் கலவன் பாடசாலையின் தொழில் நுட்பக் கட்டடத் தொகுதியை வட மாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம்.சாள்ஸ் நேற்று முன்தினம் வைபவரீதியாகத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வட மாகாணம் ஒரு காலகட்டத்திலே கல்வியில் தலை நிமிர்ந்து நின்றதொரு மாகாணமாகும். இந்த நாட்டிலுள்ள அனைவருமே கல்வியென்று சொன்னால் யாழ்ப்பாணமும் வடமாகாணமும் என்று சொல்லுமளவிற்கு இருந்தது. மாணவர்கள் பாடசாலைகளுக்கு வருகை தந்து கல்வி கற்பதை பாக்கியமாக கருதினார்கள். அந்நிலைமை மாறி இன்று க.பொ.த. சாதாரணப் பரீட்சைப் பெறுபேற்றில் 9 ஆவது இடத்தில் வட மாகாணம் இருக்கின்றது.

வளப்பகிர்வைச் சரியாகப் பகிர்ந்து கொள்ளவேண்டுமென்பதில் வட மாகாண சபை மிக ஆழமாகச் சிந்தித்து செயலாற்றிக்கொண்டிருக்கின்றது. பிரதமரின் வேண்டுதலின் பேரில் நமது தேவைகளை முன்னிலைப்படுத்திய கோரிக்கையை அவரிடம் கையளித்துள்ளேன்.

அரச உத்தியோகத்தை தேடிச் சென்றாலும், தனியார் வேலையைத் தேடிச் சென்றாலும், சுய தொழில் செய்தாலும், வேலைக்காக வெளிநாடுகளுக்குச் சென்றாலும் உங்களுடைய கல்வித் தகைமையென்பது மிகவும் முக்கியமானது. கல்வி அறிவுள்ளவர்களாகவும் கல்வித் தகைமையைக் கொண்டிருப்பவர்களாகவும் இருக்கவேண்டும்.

தற்போது அரசாங்கம் பல்கலைக் கல்விக்காக இன்னுமொரு செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது. 'சித்தி பல்கலைக் கழகம்' என்ற ஒன்று உருவாக்கப்படவுள்ளது. தற்போது வெட்டுப்புள்ளிகள் ஊடாக பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை உள்வாங்கும் முறை நடைமுறையிலுள்ளது. அதாவது 20 சதவீதமான மாணவர்களே பல்கலைக்கழகங்களுக்குள் உள்வாங்கப்படுகின்றனர். இந்த 'சித்தி பல்கலைக்கழகத்தில்' நீங்களாகவே விரும்பிய துறைகளில் விண்ணப்பித்து இணைந்து கொள்ள முடியும்.

இப் பல்கலைக்கழகத்தை முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுக்



கொண்டிருக்கின்றன. க.பொ.த. சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்கள் இல்லாமல் எந்தப் பல்கலைக்கழகத்தை உருவாக்கினாலும் அதனால் பயனடையப்போவது நமது மாகாணத்தைச் சார்ந்தவர்களாக இருக்கப்போவதில்லை. ஆகவே மாணவர்கள் கல்வித்தகைமையை உயர்த்திக் கொள்ள வேண்டும். உங்கள் ஒளிமயமான எதிர்காலத்திற்காக உங்களை தயார்படுத்திக்கொள்ளுங்கள் என தெரிவித்தார். (5-8)


# பொலிஸாரிடம் சொல்லாதீர்கள் என்னிடம் சொல்லுங்கள்

## மக்களிடம் ஜனாதிபதி விடுத்துள்ள கோரிக்கை

(கொழும்பு)

போதைப்பொருள் விற்பனையாளர்கள் தொடர்பான தகவல்களை பொலிஸாருக்கு வழங்க வேண்டாம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

அந்த தகவல்களை நேரடியாக ஜனாதிபதி செயலகத்திற்கு வழங்குமாறும் பணிப்புரை விடுத்துள்ளார்.



நாட்டு மக்கள் முகம் கொடுத்துள்ள பாரிய பிரச்சினைகளில் ஒன்றாக போதைப்பொருள் பிரச்சினை காணப்படுகின்றது. இது குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியும் எந்த பலனும் கிடைக்கவில்லை என பொதுமக்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில் பொலிஸாரிடம் அந்த தகவல்களை வழங்காமல் தன்னிடம் வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ஜ-4)

# தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 165 பேர் சொந்த இடங்களுக்கு

(நெளுக்குளம்)

வெளிநாடுகளில் இருந்து இலங்கை திரும்பிய நிலையில் வவுனியா வேலங்குளம் தனிமைப்படுத்தல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிரு ந்த 165 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

கொவிட்-19 நோய்தாக்கம் காரணமாக வெளிநாடுகளில் இருக்கும் இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வரும் செயற்பாடுகள் அரசினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அந்தவகையில் கடந்த 10 ஆம் திகதி டுபாயிலிருந்து அழைத்து வரப்பட்டவர்கள் வவுனியா வேலங்குளம் விமானப்படைத் தளத்தில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் முகாமிற்கு அழைத்து வரப்பட்டு தனிமைப் படுத்தப்பட்டனர்.

அவர்கள் 19நாட்கள் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்த நிலையில், அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மேற்குறித்த 165 பேருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டு கொரோனா தொற்று பீடிக்கவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவர்கள் சொந்த இடங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (4-5-299)

# காவல் அரண் இடமாற்றம்

(குருமன்காடு)

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் காணப்பட்ட பொலிஸ் காவல் அரண் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு வன்னி பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்த உத்தரவின் பேரில் வவுனியா புகையிரத நிலைய பிரதான வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

பண்டாரிக்குளம் செல்லும் பிரதான பாதை ஒடுங்கிய பாதையாக காணப்படுவதுடன், அவ்விடத்தில் அமைந்துள்ள பொலிஸ் காவல் அரணில் பொலிஸார் வாகனத்தினை மறித்து சோதனை நடவடிக்கையில் ஈடுபடும்போது அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாக வன்னி பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்தவின் கவனத்திற்கு கொண்டு சென்றதையடுத்து குறித்த பொலிஸ் காவல் அரணை அகற்றி போக்குவரத்துக்கு இடையூறு இல்லாதவாறு புகையிரத நிலைய பிரதான வீதியில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. (4-5-250)

# கிரவல் அகழப்படுவதால் குளத்திற்கு செல்லும் நீர் தடைப்படுகிறது

## அதிகாரிகள் சுட்டிக்காட்டு



(நெளுக்குளம்)

வவுனியா கண்ணாட்டிகணேசபுரம் பகுதியில் கிரவல் அகழ்வுப்பணிகள் இடம்பெறுவதால் அப்பகுதியை சூழவுள்ள நான்கு குளங்களுக்கு செல்ல வேண்டிய நீரேந்துப்பகுதிகளுக்கு தண்ணி செல்வதில் தடை ஏற்படுகின்றது.

இதனால் நீரை பயன்படுத்தி விவசாயச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கிரவல் அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள இடங்களில் தண்ணி நிரம்பியுள்ளது என்றும் நேற்று அப்பகுதிக்கு ஆய்வு மற்றும் கள விஜயம் மேற்கொண்ட அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர் .

கடந்த முறை சிறுபோகம் மேற்கொள்வதற்கு குளத்தில் தண்ணீர் இன்மையால் சிறுபோகச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் எமது பகுதியில் இடம்பெற்று வரும் கிரவல் அகழ்வுப்பணியை தடுத்து நிறுத்துமாறும் அங்கு கிரவல் அகழப்பட்ட இடங்களில் தண்ணீர் தேங்கியிருப்பதால் குளத்திற்கு தண்ணீர் வருவதில்லை. இதனால் பெரும்போக நெற்செய்கைக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கண்ணாட்டி கணேசபுரம்கமக்கார அமைப்பு, கிராம அபிவிருத்திச் சங்கம் என்பன இணைந்து கடந்த மாதம் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரைச்சந்தித்து மகஜர் ஒன்றை கையளித்தனர்.

இதன் ஆரம்பகட்ட நடவடிக்கையாக நேற்று அப்பகுதிக்கு சென்ற வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், கமநல அபிருத்தி தொழில்நுட்ப அலுவலகர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலாளர்.கனியவள திணைக்கள அதிகாரிகள் குழுவினர் இணைந்து மேற்கொண்ட கள ஆய்வின்போது அப்பகுதியிலுள்ள குளங்களுக்குச் செல்லவேண்டிய தண்ணீர் கிரவல் அகழ்வுப்பணியால் தடுக்கப்பட்டுள்ளதாக கள ஆய்வின்போது தெரியவந்துள்ளது.

கண்ணாட்டிகணேசபுரம் பகுதியிலுள்ள முந்நூறு ஏக்கர் பகுதியில் 25 தொடக்கம் 30 ஏக்கர் வரையான நிலப் பகுதிகளில் கிரவல் அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்படுவதால் இக் குளங்களுக்குச் செல்லவேண்டிய நீர் தடைப்படுகிறது.

இதனால் விவசாயம் பாதிப்படைகிறது. எனவே இவ்விடயம் தொடர்பான தீர்மானம் விரைவில் எடுக்கப்படும் எனத் தெரிவித்தனர். (4-5-299)

# எம்.பிக்களுக்கு இலவச வாகனப்பத்திரம் நிறுத்தப்படும்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இலவச வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதை நிறுத்தி, பொது போக்குவரத்துச் சேவைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என, போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.



அம்பாந்தோட்டையில்நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுக் கூட்டத்திலேயே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,எமது நாட்டில் தேசிய வருமானத்திலிருந்து பில்லியன்கணக்கான ரூபா நிதி, பாராளுமன்ற உறுப்பினர்கள் வாகனங்கள் கொள்வனவு செய்வதற்கான அனுமதிப்பத்திரங்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றது. இதன் காரணமாக பாதிக்கப்படுவது நாட்டு மக்களே என தெரிவித்தார். (ஜ-4)

## இலங்கை கிரிக்கெட்டின் உப தலைவர் இராஜினாமா

(கொழும்பு)

ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் உப தலைவர் கே.மதிவாணன் தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

கிரிக்கெட் நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மை இன்மையால் தான் பதவியில் இருந்து விலக தீர்மானித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபைக்கு தெரியப்படுத்தியதாக தெரிவித்துள்ளார். (ஜ-4)

## வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் கடவுச்சீட்டுடன் வாக்களிக்கலாம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து திரும்பிவந்தவர்கள் வாக்களிக்க வரும்போது தேசிய அடையாள அட்டைக்குக் கூடுதலாக கடவுச்சீட்டையும் கொண்டு வருமாறு தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. வாக்கு மோசடிகளைத் தடுக்கும் நடவடிக்கையாக அவர்கள் வாக்களிப்பு நிலையங்களில் தமது அடையாளத்தை உறுதி செய்ய இந்த நடைமுறையை அறிவித்துள்ளது.

அந்த நடைமுறையைப் பின்பற்றாத எந்தவொரு நபருக்கும் வாக்குச்சீட்டு வழங்கப்படாது. சந்தேகத்திற்கிடமாக வாக்களிக்க முயன்ற எந்த நபரும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார்கள்.

வெளிநாடுகளுக்குச் சென்ற நபர்களின் விபரங்கள் வாக்களிப்பு நிலையங்களில் உள்ள தேர்தல் பதிவேட்டில் கிராம உத்தியோகத்தர்களால் பெறப்பட்டு குறிக்கப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## 100 இலங்கையர்கள் அமெரிக்காவுக்குள் நுழையலாம்

(கொழும்பு)

கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்களை தயாரிக்கும் நடவடிக்கையை இலங்கை ஆடை உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதற்கு அமெரிக்கா இணக்கம் வெளியிட்டுள்ளது.

ஆடைத்தொழிற்சாலை சங்கத்தின் கூட்டமைப்பு வெளியிட்ட தகவலுக்கமைய இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் அமெரிக்கா இணைந்துமேற்கொள்ளும் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கை ஆடை உற்பத்தியாளர்கள் 100 பேருக்கு அமெரிக்க சந்தையில் நுழைய சந்தர்ப்பம் கிடைக்கவுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ்தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள், உணவுமற்றும் மருந்து நிர்வாக விதிமுறைகளின் படி தயாரிக்கப்படவுள்ளது. (ஜ-4)




## நாடாளுமன்றத் தேர்தலில் 12 இலட்சம் புதிய வாக்காளர்கள்

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 12 லட்சத்துக்கும் மேற்பட்ட புதிய வாக்காளர்கள் வாக்களிக்க எதிர்பார்த்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, 2015 ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் 12 லட்சத்து 19 ஆயிரத்து 395 புதிய வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் தேர்தலில் வாக்களிப்பதற்கு மொத்தமாக ஒரு கோடியே 62 லட்சத்து 63 ஆயிரத்து 885 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

இதற்கமைய, அவர்களில் 31.95 வீதமானோர் 18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் எனவும், 1.67 வீதமானோர், முதல் வாக்காளர்கள் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

22 தேர்தல் மாவட்டங்களில் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான புதிய வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, கொழும்பு மாவட்டத்தில் 38 ஆயிரத்து 806 புதிய வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் குறைந்தளவிலான புதிய வாக்காளர்கள் பொலநறுவை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அங்கு 4 ஆயிரத்து 666 வாக்காளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதேவேளை, வாக்களிப்பதற்காக கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவான வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

இதற்கமைய, கம்பஹா மாவட்டத்தில் 17 லட்சத்து 85 ஆயிரத்து தொள்ளாயிரத்து 64 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



# முள்ளிவாய்க்காலில் வகைதொகையின்றி அழிக்கப்பட்ட

# எம் உறவுகளை ஒரு கணம் சிந்தித்திருந்தால்

# குறுகிய சுய அபிவிருத்தியில் ஈடுபட மனம் இடமளிக்காது

## விக்னேஸ்வரன் சாடல்




(யாழ்ப்பாணம்)

**போலி வாக்குறுதிகளை அள்ளி வழங்கி ஏமாற்றுபவன் நானல்ல. நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் ஊடாக மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. ஏற்கனவே புலத்திலும் நிலத்திலும் புத்திஜீவிகள் பலர் எம்முடன் இணைந்து செயற்படத் தொடங்கி விட்டார்கள் என மானிப்பாயில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு இன்னும் சில தினங்கள் மட்டுமே உள்ள நிலையில் எமது கட்சிக்கு உங்களின் அமோக ஆதரவை வழங்கி என்னையும் எனது கட்சியின் ஏனைய வேட்பாளர்களையும் அமோக வெற்றியடையச் செய்து ஒரு பலமான கட்சியாக பாராளுமன்றத்தில் எமது குரல் ஒலிக்கச் செய்வீர்கள் என நம்புகின்றேன்.

அண்மைக் காலமாக சுமந்திரன் அவர்களின் அறிக்கைகளும், பத்திரிகைச் செய்திகளும் எமக்கு அதிர்ச்சி தருவனவாக உள்ளன. அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்வதைக் குறிக்கோளாகக் கொண்டே அவரது அறிக்கைகள் வெளிவருகின்றன. அவர் மிகவும் தெட்டத் தெளிவாக இதனைச் சொல்லியிருக்கின்றார். ஐக்கிய தேசியக் கட்சி அல்லது டெலிபோன் கட்சியில் சேர்ந்து தேர்தலில் வென்று அமைச்சுப்பதவி பெறுவதில் எமக்கு ஆட்சேபனை ஒன்றுமில்லை.

ஆனால் தாம் அமைச்சுப் பதவிகளைப் பெறுவதற்கு தமிழ் மக்கள் தமக்கு ஆணை தர வேண்டும் எனக் கேட்டதன் மூலம் தமிழ் மக்களை முட்டாள்கள் என்றும் சுய கௌரவம் இல்லாதவர்கள் என்றும் ஏமாளிகள் என்றும் நினைக்கின்றார் போலத் தெரிகிறது. இவற்றின் அடிப்படையில் எந்தளவுக்கு இன அழிப்பு மற்றும் போர்க்குற்றங்களுக்கான சர்வதேச விசாரணையைத் தடுத்து நிறுத்தும் வகையில் இவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள மற்றையோரும் செயற்பட்டிருப்பார்கள் என்று புரிகின்றது.

பொருளாதார அபிவிருத்திக்காக அமைச்சுப் பதவிகளைப்பெற வேண்டும் என்ற கூற்றில் முரண்பாடு இருக்கின்றது. முன்னர் இக் கூட்டமைப்பினர் தான் அவர் அமைச்சுப் பதவியைப் பெற்றதன் காரணமாக அமைச்சரை வசைபாடினர். இப்போது அந்த அமைச்சர் மீது மதிப்பு வந்து விட்டதா? அல்லது அபிவிருத்தி மீது அபிமானம் பிறந்து விட்டதா? உண்மையிலேயே இவர்களுக்கு அபிவிருத்தி மீது அக்கறை இருந்திருக்குமாயின் வட மாகாண சபைக்கு ஒத்துழைப்பை வழங்கி முதலமைச்சர் நிதியத்தை உருவாக்குவதற்கு உதவியிருக்க முடியும்.

ஆனால் எந்த விதத்திலும் எமக்கு உதவாதது மட்டுமன்றி மறைமுகமாக எதிர்ப்புக்களையே காட்டி வந்தனர். எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உண்மைமுகம் அண்மைக்காலமாக தெரியத் தொடங்கியிருக்கின்றது. தம்மை வளப்படுத்துவதற்கும், சொத்துக் குவிப்பதற்கும், மாடமாளிகை, சொகுசுகார் என அவர்கள் சிந்தனைகள் ஆகாயத்தை நோக்கி நகரத் தொடங்கி விட்டன.

அவர்களுக்கு மக்கள் மீதோ அல்லது அவர்களின் அபிலாஷைகள் பற்றியோ எந்தவித கரிசனையும் இல்லை. முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் வகைதொகையின்றி அழிக்கப்பட்ட எமது உறவுகளின் குடும்பத்தினர் பற்றி சற்றேனும் சிந்தித்திருந்தால் இவ்வாறான குறுகிய சுய அபிவிருத்தி நோக்கங்களின் மேல் ஈடுபாடு சென்றிருக்காது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீதோ அல்லது ஏனைய அரசியல் கட்சிகள் மீதோ எனக்கு எவ்வித காழ்ப்புணர்ச்சியும் கிடையாது. ஆனால் அவர்கள் தான் என்னைப் பார்த்து அஞ்சுகின்றார்கள் போலத் தெரிகின்றது. அரசாங்க அதிகாரிகளைக் கொண்டு பிழையான தகவல்களைத் திரட்டுகின்றார்கள். நடவாத நிகழ்வுகளை நடந்ததாகக் கூறுகின்றார்கள். நிதி நிர்வாகத்தில் இலங்கையிலேயே முதற் பரிசைப் பெற்ற எம்மை நிர்வாகம் தெரியாதவர்கள் என்கின்றார்கள். பொய்களை மூட்டை கட்டிவந்து தமது கூட்டங்களில் அவிழ்த்து விடுகின்றார்கள்.

நான் வாராந்தம் பத்திரிகைகளில் வழங்கி வருகின்ற கேள்வி பதில்கள் மக்களுக்கு ஒரு தெளிவூட்டலை ஏற்படுத்தியிருக்கின்றது. இதனைக் கலைக்கும் முகமாக தேர்தலுக்கு முதல் நாள் என் மீது கூடுதல் அக்கறை கொண்ட சில பத்திரிகையாளர்கள் இணைந்து என் மீது கேள்விக்கணைகளைத்தொடுக்க ஆயத்தமாகின்றார்கள் என அறிந்தேன். உண்மையில் கேள்வி கேட்க விரும்புபவர்கள் அல்லது அரசியல் தெளிவை தமது பத்திரிகை வாயிலாகத் தெரியப் படுத்த விரும்புபவர்கள் அவர்களின் கேள்விகளைநான் பதிலளிக்கக்கூடிய வகையில் தேர்தலுக்கு முற்கூட்டியே தொடுத்திருக்க வேண்டும்.

அதை விடுத்து தேர்தலுக்கு முன் பதில் கூற முடியாதவிதமாகப் பொய்யான அடிப்படையிலான கேள்விக் கணைகளைத் தொடுக்க இருப்பது கோழைத்தனத்தையும் அவர்களின் பயத்தையுமே பிரதிபலிக்கின்றன.

நான் போலி வாக்குறுதிகளை அள்ளி வழங்கி அரசியற் தீர்வு பெற்றுத் தருவேன். அரச வேலை பெற்றுத் தருவேன் என்று ஏமாற்றுபவன் அல்ல. ஆனால் எமது நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளினூடாக மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. ஏற்கனவே புத்திஜீவிகள் பலர் புலத்திலும் நிலத்திலும் எம்முடன் ஒன்றிணைந்து இம் மாற்றத்திற்காக உழைக்கத் தொடங்கி விட்டார்கள். அத்துடன் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த ஐந்து கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுகின்றன. கொள்கை மற்றும் அணுகு முறைகளின் அடிப்படையில் மேலும் பலரை இணைத்துக் கொள்ள எதிர்பார்க்கின்றோம்.

தற்போது தனியாகப் பிரிந்து நிற்கின்ற அல்லது சுயேட்சையாக களமிறங்கியிருக்கின்ற கட்சிகளில் இருந்து பலர் கொள்கை அடிப்படையில் எம்முடன் வந்து இணைந்து கொள்ள வாய்ப்பிருக்கின்றது. சிறுசிறு பிரச்சினைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களின் அடிப்படையில் பிரிந்த சக அரசியல் தலைவர்களும் தொண்டர்களும் எம்முடன் வந்து விரைவில் இணைந்து கொள்வார்கள்.

இனப் பிரச்சினைக்கான தீர்வு வெறுமனே எமது அரசுடன் பேசுவதால் மட்டும் கிடைத்து விடும் என நாம் நம்பவில்லை. மாறாக சர்வதேசத்துடன் பேசுவதன் மூலம் அவர்களிற்கு ஒரு அரசியல் தெளிவை ஏற்படுத்தி அதன் மூலமாக வெற்றி வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் என நம்புகின்றோம். பல வெளிநாட்டுத் தூதுவர்களுடன் ஏற்கனவே எமது தொடர்புகளை தொடங்கியுள்ளேன்.

பாராளுமன்ற அங்கத்தவராக உங்கள் முன் வருகை தந்து அடுத்து உரையாற்ற வழியமைப்பீர்கள் என்று நம்புகிறேன் என நீதியரசர் விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

# கடமைக்குத் திரும்பியுள்ள

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிராந்திய சுகாதார பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஒன்பது நாட்களின் பின்னர் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பணி பகிஷ்கரிப்பினை கைவிட்டு நேற்று கடமைக்கு திரும்பியுள்ளார்கள்.

நாடளாவிய ரீதியில் கடந்த 16 ஆம் திகதி தொடக்கம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் பணிப்பகிஷ்கரிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

நோய்த்தடுப்பு மற்றும் தனிமைப்படுத்தல் கட்டளை சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பில் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் தங்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படவில்லை என அறிவித்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தால் பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

பிரதமர், சுகாதார அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அகில இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன அறிவித்திருந்தார்.

அதற்கமைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தலையீட்டுடன் நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடல் இடம்பெற்ற தற்கமைய தங்களின் பணிப்பகிஷ்கரிப்பைக் கைவிடத் தீர்மானித்ததாக அகில இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# வாக்குகளுக்காக வாக்குறுதிகளை வழங்குபவர்கள் நாங்களல்ல

## சிவசக்தி ஆனந்தன்

(நெளுக்குளம்)

தமிழ்த் தேசியக் கொள்கையில் பற்றுறுதியுடன் தளராது செயற்படுவோம். தேர்தலின் பின்னர் எவ்வாறு பயணிப்பது என்பது பற்றிய ஆரோக்கியமான திட்டங்கள் எம்மிடம் உள்ளன. தற்போதுள்ள கையறு நிலையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைகளுக்கான தீர்வு, பொறுப்புக்கூறல் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் கையாள்வது தொடர்பிலும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியிடத்தில் திட்டங்கள் உள்ளனவென்று அதன் பொதுச்செயலாளரும் வன்னி மாவட்ட தலைமை வேட்பாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

கனகராயன் குளத்தில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தேர்தல் அலுலகத்தினை நேற்று முன்தினம் திறந்து வைத்ததன் பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசிய அரசியலும், தமிழர்களின் அபிலாசைகளும் கையறுநிலையில் தான் தற்போதுள்ளது. அடுத்த கட்டமாக என்னசெய்வதென்ற வெறுமையான நிலைமையொன்றே காணப்படுகின்றது.

தமிழ்த் தரப்பில் காணப்பட்ட துருப்புச் சீட்டுக்கள் அனைத்தையும் கூட்டமைப்பு கடந்த நான்கரை வருடங்களில் சரணாகதி அரசியலுக்காக விட்டுக்கொடுத்துவிட்டது. தற்போது தமிழர் தரப்பின் பேரம்பேசல் என்பது கேள்விக்குள்ளாகியுள்ளது.

இவ்வாறான நிலையில் மத்தியில் ஆட்சியில் இருப்பவர்களும் மாறியிருக்கும் உலக அரசியல் ஒழுங்கை கவனத்தில் கொள்ளாது தமிழ் மக்கள் விடயத்தில் ஏதேச்சதிகாரமான கருத்துக்களையே தெரிவிக்கின்றார்கள். இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லையென்றே கூறுமளவிற்கு நிலைமைகள் மோசமடைந்துள்ளன. பொறுப்புக்கூறலை செய்யமாட்டோமென்று சர்வதேசத்திற்கே சவால் விடுக்கும் நிலைமை உருவாகியுள்ளது.

இந்த விடயங்களை தனியே ஒரு அரசியல் கட்டமைப்பாக நாம் கையாண்டு வென்றுவிடமுடியாது. ஆகவே தான் நாம் அடுத்தகட்ட செயல் நெறி தொடர்பில் திட்டங்களைக் கொண்டிருக்கின்றோம்.

முதலாவதாக, தமிழர் தாயகத்தில் உள்ள அனைத்து சர்வமதத்தலைவர்களையும் ஓரணியில் திரட்டுவதோடு துறைசார் புத்திஜீவிகளையும் ஒருங்கிணைத்து ஒரு நிபுணத்துவம் நிறைந்த சிவில் அமைப்பொன்றை தோற்றுவிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம்.

இந்த சிவில் அமைப்பானது முழுமையான ஜனநாயகப் போக்கினைக் கொண்டிருப்பதோடு, தமிழ் மக்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளுக்கு எதிராக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் குரலெழுப்பவல்ல சக்தியைக் கொண்டதாக அமையவுள்ளது.

இதற்கு அடுத்தபடியாக சிதறிக் கிடக்கும் கொள்கை ரீதியாக உடன்படவல்ல அமைப்புக்களை ஓரணியில் திரட்டி தமிழர் நிலத்திற்கும் புலத்திற்குமான உறவுகளை வலுவடையச் செய்யும் வகையிலான சிந்தனைக் குழாமொன்றை உருவாக்குதலையும் இலக்காக கொண்டிருக்கின்றோம்.

அதுமட்டுமன்றி அகத்திலும் புலத்தில் ஒருங்கிணைக்கப்படும் தரப்புக்களை மையப்படுத்தி தமிழர் தாயகத்தின் வாழ்வாதார, நிலையான அபிவிருத்திக்கான நிதிக்கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கும் முயற்சிகளை எடுக்கவுள்ளோம்.

அதேபோன்று இனப்பிரச்சினை தீர்வு, பொறுப்புக்கூறல் விடயத்தில் எமது அரசியல் கட்சி



யின் நியாயமான நிலைப்பாட்டிற்கு மேலும் வலுச்சேர்க்கும் முகமாக சிவில் அமைப்புக்கள், புத்திஜீவிகள், சர்வமத தலைவர்களை ஒருங்கிணைத்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்வேறு அழுத்தங்களை பிரயோகிப்பதற்கான நடவடிக்கைகளை முறையாக முன்னெடுக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

மேலும், இவை அனைத்தும் தேர்தல்காலத்தில் உங்கள் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காக இந்த மேடையில் மட்டும் வழங்கப்படும் வாக்குறுதிகளாக நீங்கள் நினைத்துவிடக்கூடாது. எம்மைப் பொறுத்தவரையில் விடுதலையை எதிர்பார்த்திருக்கும் இனமொன்று தமது சமூகத்தின் அனைத்து தரப்புக்களையும் தன்னுள் ஈர்த்து கட்டமைப்பு மிக்கதாக நிறுவனமயப்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

அதற்கான வேலைத் திட்டங்கள் அனைத்தும் துரிதகதியில் மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2-299)

# ஜோர்தான் தாக்குதலுக்கு ஜே.வி.பி.கண்டனம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஜோர்தானில் தொழில்களை இழந்த இலங்கைப் பணியாளர்கள் மீது அந்நாட்டு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் முறையாக விசாரணைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் எனமக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கை பணியாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)


## கண்ணீருடன்...

வைத்திய கலாநிதி
**கபிரியேல் எட்வேட்**



திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக அங்கத்தவரும்,மூதவை உறுப்பினரும், மன்றத்தின் வளர்ச்சியில் அரை நூற்றாண்டுக்கு மேலாக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய கலைச் சேவையாளனுமாகிய வைத்திய கலாநிதி கபிரியேல் எட்வேட் அவர்கள் 28.07.2020 இல் காலமானதையிட்டு ஆழ்ந்த துயரடைந்துள்ளோம். அவருக்கு எமது நெஞ்சம் கனக்கும் கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்கி,அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து,அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

இயக்குநர், அங்கத்தவர்கள்
திருமறைக் கலாமன்றம்,
238,பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:இன்று காலை 8.45 மணிக்கு அவரது இல்லத்தில் திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறும்.இந்நிகழ்வில் மன்ற அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.



மண்ணுலகில்
03.04.1926



விண்ணுலகில்
08.07.2014

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர்.சின்னட்டியன் பசுபதி

திதி–வளர்பிறை ஏகாதசி –30.07.2020

### ஞாபகார்த்த நிதியத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா

காலம் - 30.07.2020 வியாழன் பகல் 11.30 மணி

இடம் - நாவலம்பதி ஞானவைரவர் பொதுநோக்கு மண்டபம்

தலைமை- திரு.இ.இமயகரன்-ஆசிரியர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பிரதம விருந்தினர் - திரு.இ.சர்வேஸ்வரா-விரிவுரையாளர் கல்வியற்துறை யாழ்.பல்கலைக்கழகம்

சிறப்பு விருந்தினர்கள் திரு.மு.அநாதரட்சகன் ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் யாழ்.கல்வி வலயம்

சிவஸ்ரீ கி. கிருஷ்ணமூர்த்திக் குருக்கள்-விசேட குரு நாவலம்பதி ஞானவைரவர் ஆலயம்

நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர் திரு.மு.ஐங்கரன்-ஆசிரியர் (ஆவரங்கால் நடராஜஇராமலிங்க வித்தியாலயம்) நிகழ்வில் 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைகளில் சித்தியடைந்த கல்விச் சாதனையாளர்களுக்கு நிதி வழங்கி கௌரவிக்கப் படவுள்ளனர். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (3435)

ஆண்டுகள் ஆறுமின்னலென மறைந்தன இமைக்க மறுத்து
எங்கள் இதயம் உறங்க மறுத்து எமது
உயர்விற்காய் உயிர் வாழ்ந்து துயரெல்லாம்
நீங்கள் சுமந்து இனிய வாழ்வை எமக்களித்து
உறவுகளை மேம்படுத்தி நல்ல மனிதன் எனப்
பெயர் பெற்ற உத்தமரே உங்களோடு
வாழ்ந்த காலம் எம் நெஞ்சை விட்டு அகலாது
ஆயிரம் ஜென்மங்கள் எடுத்தாலும்
ஆறாது எம் துயரம் எம் நெஞ்சில் உங்களது
நினைவுகளை நினைந்து பிரார்த்திக்கின்றோம்.

ஊரெழு கிழக்கு குடும்பத்தினர்.

அமரர். சின்னட்டியன் பசுபதி ஞாபகார்த்த நிதியம்

# பாரதம்

## சிங்கப்பூர் பாராளுமன்றத்தில் முதல் எதிர்க்கட்சித் தலைவராக இந்திய வம்சாவளி சட்டத்தரணி நியமனம்

(சிங்கப்பூர்)
சிங்கப்பூர் பாராளுமன்ற வரலாற்றில் முதல் முறையாக எதிர்க்கட்சித் தலைவராக இந்திய வம்சாவளி சட்டத்தரணி பிரீத்தம் சிங் நியமிக்கப்பட்டுள்ளார்.



தென்கிழக்கு ஆசிய நாடான சிங்கப்பூரில் ஜூலை 10 இல் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில், பிரதமர் லீ செய்ன் லூங் தலைமையிலான பி.ஏ.பி. எனப்படும் மக்கள் செயல் கட்சி 83 இடங்களில் வெற்றி பெற்று கடந்த 27 ஆம் திகதி ஆட்சி அமைத்தது.

இந்தத் தேர்தலில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரும் சட்டத்தரணியுமான பிரீத்தம் சிங் (வயது-43) பொதுச் செயலராக உள்ள தொழிலாளர் கட்சி 10 இடங்களைக் கைப்பற்றி பிரதான எதிர்க்கட்சியாக மாறியது.

இதைத்தொடர்ந்து, சிங்கப்பூர் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராக பிரீத்தம் சிங் நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டார்.

சிங்கப்பூர் பாராளுமன்ற வரலாற்றில் இதுபோல் எதிர்க்கட்சித் தலைவரை முறையாக நியமனம் செய்வது இதுவே முதல் முறையாகும். ஏனெனில், அந்நாட்டின் அரசியலமைப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் குறித்த வழிகாட்டுதல்களில் எதிர்க்கட்சித் தலைவர் நியமனம் குறித்த நிலைப்பாடு ஏதும் இல்லை.(2)

## இந்தியா வந்தடைந்த ரபேல் விமானங்கள்

(டில்லி)
பிரான்ஸிடம் இருந்து 36 ரபேல் போர் விமானங்களை இந்தியா வாங்குவதற்கு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இந்த 36 ரபேல் ஜெட் விமானங்களில் 30 போர் விமானங்கள் மற்றும் 6 பயிற்சி விமானங்கள் அடங்கும். முதல்கட்டமாக பிரான்ஸ் நாட்டில் இருந்து அதிநவீன 5 ரபேல் போர் விமானங்கள், கடந்த திங்கட்கிழமை இந்தியாவுக்குப் புறப்பட்டன.

பயணத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள விமான தளத்தில் விமானங்கள் தரையிறக்கப்பட்டன. இதையடுத்து தனது பயணத்தை மீண்டும் தொடங்கிய ரபேல் விமானங்கள் தொடர்ந்து இந்தியா நோக்கி புறப்பட்டன.

ரபேல் போர் விமானங்களின் பயணத்தின்போது உரிய உதவிகளை வழங்குவதற்காக பிரான்ஸ் நாட்டின் விமானப் படை விமானங்களும் இந்த பயணத்தில் உடன் வந்தன. பயண தூரம் அதிகம் என்பதால் ரபேல் போர் விமானங்களுக்கு நடு வானிலேயே எரிபொருள் நிரப்பப்பட்டது.

இந்திய எல்லைக்குள் இரண்டு Su-30MKIs விமானங்கள் படைசூழ கம்பீரமாக நுழைந்தன.

பின்னர் ஐந்து ரபேல் விமானங்களும் இந்தியாவின் அரியானா மாநிலம் அம்பாலா விமானத்தளத்தில் தரையிறங்கின.(2)

## கொரோனா பரவல் தீவிரம்
## 80 ஆயிரம் பேரை வெளியேற்றும் வியட்நாம்

(ஹனோல்)
வியட்நாமில் பிரபல சுற்றுலாத் தளமான டா நாங் பகுதியில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமாக இருப்பதைத் தொடர்ந்து அங்குள்ள சுற்றுலாப் பயணிகள் வெளியேற்றப்படவுள்ளனர்.

இதுகுறித்து வியட்நாம் அரசு தரப்பில், "வியட்நாமின் பிரபல சுற்றுலாப் பகுதிகளில் ஒன்று டா நாங். இங்கு கடந்த சனிக்கிழமை சுற்றுலாப் பயணி ஒருவருக்குக் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து இரண்டு பேருக்குக் கொரோனா தொற்று அங்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வியட்நாமில் கடந்த நூறு நாட்களாக யாருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில் தற்போது அங்குள்ள சுற்றுலாப் பயணிகளை வெளியேற்றும் நடவடிக்கை வேகமாக நடந்து வருகிறது. சுற்றுலாப் பயணிகள் உட்பட 80 ஆயிரம் பேர் அப்பகுதியிலிருந்து வெளியேற்றப்படவுள்ளனர். 95.5 மில்லியன் மக்கள்தொகை கொண்ட வியட்நாமில் முதலாவது கொரோனா தொற்றாளர் ஏப்ரல் மாதம் அடையாளம் காணப்பட்டார்.

இந்நிலையில், வியட்நாமில் கொரோனாவால் 431பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, இதுவரை உயிரிழப்பு பதிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## அமெரிக்காவுடனான பதற்றங்களுக்கு மத்தியில் ஈரான் ஏவுகணை பரிசோதனை

(டெஹ்ரான்)
ஈரானின் துணை இராணுவப் புரட்சிகர பாதுகாப்புப் படை ஹோர்முஸ் நீரிணையிலிருந்து பிரதி விமானம் தாங்கிக் கப்பலைக் குறிவைத்து ஹெலிகொப்டரில் இருந்து ஏவுகணைகளை வீசிச் சோதனை மேற்கொண்டுள்ளதாக அந்நாட்டு அரச தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.



"மொஹமட் நபி 14" என அழைக்கப்படும் இந்தப் பயிற்சிகள் உலகளாவிய எண்ணெய் உற்பத்தியில் ஐந்தில் ஒரு பகுதிக்கான முக்கிய கப்பல் பாதையான ஹார்முஸ் நீரிணைக்கு அருகில் நடைபெற்றது.

ஜனவரி மாதம் அமெரிக்க ட்ரோன் தாக்குதல் பக்தாத்தில் ஒரு உயர் ஈரானிய ஜெனரலைக் கொன்றது மற்றும் டெஹ்ரான் ஈராக்கில் அமெரிக்கப் படைகளை குறிவைத்து கண்டம் விட்டுக் கண்டம் செல்லும் ஏவுகணைகளை வீசியதன் மூலம் பதிலளித்தது.

கொரோனா வைரஸ்தொற்று நோய் ஈரான் மற்றும் அமெரிக்கா இரண்டின் பொருளாதாரங்களைப் பல மாதங்களாக மூழ்கடித்துள்ள நிலையில் டெஹ்ரான் மீது பல ஆண்டுகளாக ஐ.நா.ஆயுதத் தடையை நீடிக்க அமெரிக்கா வாதிடுவதால் மோதலின் அறிகுறிகள் அதிகரித்து வருகின்றன.

சிரியா மீது அண்மையில் ஒரு அமெரிக்க ஜெட் போர் விமானம் ஈரானிய பயணிகள் விமானத்தை நெருங்கிய சம்பவமும் இரு நாடுகளுக்கிடையிலான பதற்றங்களைப் புதுப்பித்துள்ளது.

இவ்வாறு டெஹ்ரானுக்கும் வோஷிங்டனுக்கும் இடையிலான பதற்றங்களுக்கு மத்தியில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கக் கடற்படை ஈரானின் பொறுப்பற்ற நடத்தை குறித்து கண்டனம் தெரிவித்துள்ளதுடன் இது அச்சுறுத்துவதற்கும் வற்புறுத்துவதற்குமான ஒரு முயற்சி என்றும் கூறியுள்ளது.

ஹோர்முஸ் நீரிணை, தென்கிழக்கில் ஓமான் குடாவையும் தென்மேற்கில் பாரசீகக் குடாவையும் கொண்டு அமைந்துள்ள ஒரு குறுகலான கடற்பரப்பாகும். இதன் வடக்கில் ஈரானும் தெற்கில் ஐக்கிய அரபு அமீரகமும் ஓமானின் ஒரு பகுதியான முசாந்தமும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## சீன மாண
## கடத்தும்

(சிட்னி)
அவுஸ்திரேலியாவில் படித்து வரும் சீன மாணவர்களை குறி வைத்து கடத்தும் கும்பல் அவர்களை மிரட்டி கோடிகணக்கில் பணம் பறித்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் ஏராளமான சீன மாணவர்கள் படித்து வருகின்றனர். பெரும்பாலும் சீன மாணவர்கள் பணக்கார குடும்பத்தை சேர்ந்தவர்களாக இருப்பார்கள். பணக்காரக சீன மாணவர்களை அடையாளம் கண்டு கொள்ளும் அவுஸ்திரேலிய கும்பல் ஒன்று அவர்களை குறி வைத்து கடத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளது.

சீனாவின் பொலிஸ் துறை அல்லது வருமான வரித்துறை அதிகாரிகள் போல மாணவர்களை இந்த கும்பல் போனில் தொடர்பு கொள்ளும். பிறகு, நீங்கள் சீனாவில் குற்றமிழைத்து விட்டு இங்கே

## கொரியப்போரின்
## இராணுவ அதிகாரிக

(பியாங்யாங்)
கொரியப்போர் நினைவு தினத்தை யொட்டி வடகொரியத் தலைவர் கிம் ஜாங் உன் இராணுவ அதிகாரிகளுக்கு நினைவு துப்பாக்கிகளை வழங்கினார்.

கொரியப்போரின் 67 ஆவது ஆண்டு நினைவு தினம் மிகவும் விமரிசையாக தலைநகரில் கொண்டாடப்பட்டது. நினைவு தினத்தையொட்டி வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் இராணுவ தளபதிகளுடன் உரையாடினார்.

கொரியப்போர் நினைவு தினத்தை யொட்டி வடகொரியத் தலைவர் கிம் ஜாங் உன் இராணுவ அதிகாரிகளுக்கு நினைவு துப்பாக்கிகளை வழங்கி தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார். அதனை பெற்றுக்கொண்ட இராணுவ அதிகாரிகள் அனைவரும் கூடி நின்று கைகளை உயர்த்தி முழக்கமிட்டதை கண்ட கிம் ஜாங் உன் அதனை மகிழ்ச்சியுடன் ரசித்தார்.

## கொரோனா தடுப்பூசி
## வெற்றி பெறும்

(வோஷிங்டன்)
அமெரிக்காவில் கொரோனாத் தடுப்பூசி சோதனை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், இரண்டு அமெரிக்க நிறுவனங்கள் தயாரித்துள்ள தடுப்பூசிகள் மூன்றாவது மற்றும் இறுதிக் கட்டச் சோதனையில் உள்ளதாகத் தெரிவித்ததுடன் மேலும் இந்தாண்டு இறுதிக்குள் கொரோனாத் தடுப்பூசி பயன்பாட்டுக்கு வரும் என்று டொனால்ட் ட்ரம்ப் தெரி

# வெளிநாடு

# ணவர்களை குறிவைத்து
# ம் அவுஸ்திரேலிய கும்பல்

தப்பி வந்துள்ளீர்கள். உங்களை மீண்டும் நாடு கடத்தப் போகிறோம் என்று கூறி அந்த மாணவர்களை மிரட்டுவார்கள். இதனால், பயந்து போகும் மாணவர்களை ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு வரச் சொல்லும் அந்த கும்பல் அவர்களை காரில் கடத்தி சென்று ஏதாவது ஒரு அறையில் அடைத்து வைத்து விடும்.

மாணவரின் செல்போனிலேயே அந்த காட்சியை வீடியோவாக இந்த கும்பல் பதிவு செய்யும். பிறகு, அந்த வீடியோவை சீனாவில் வசிக்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு கடத்தப்பட்டவரின் செல்போனிலிருந்தே அனுப்பி வைக்க கூறுவார்கள். பிறகு, இரு நாட்களுக்கு, கடத்தப்பட்டவரின் செல்போனை இந்த கும்பல் ஓப் செய்து வைத்து விடும்.

இதனால், தங்கள் பிள்ளைகளுக்கு என்னவோ ஏதோவென்று பெற்றோர்கள் பயந்து போவார்கள். இரு நாட்களுக்குப் பிறகு கடத்தல் கும்பல் மீண்டும் மாணவனின் செல்போனில் இருந்தே பெற்றோரை தொடர்பு கொண்டு இவ்வளவு பணம் கொடுத்தால் விட்டுவிடுவோம் என்று மிரட்டுவார்கள். இந்தச் சூழலில் கேட்கும் பணத்தை கொடுக்க மாணவர்களின் குடும்பத்தினர் தயாராக இருப்பார்கள். இப்படி சீன மாணவர்களை 8 பேரைக் கடத்திய மர்மக்கும்பல் இந்த ஆண்டில் மட்டும் 2.1 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கறந்துள்ளது.

இதையடுத்து, சிட்னியில் படித்து வரும் சீன மாணவர்கள் கடும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்று அந்த நகர பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். போனில் உங்களுக்கு ஏதாவது மிரட்டல் வந்தால் உடனடியாகப் பொலிஸுக்குத் தகவல் அளிக்க வேண்டுமென்று சீன மாணவர்களை அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (2)

## ஒரேநாளில் மட்டும்
## சீனாவில் 100 இற்கும் மேற்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள்

(பீஜிங்)

சீனாவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாத்திரம் 101 புதிய கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அந்நாட்டுச் சுகாதார ஆணையகம் வெளியிட்டுள்ள தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாத தொடக்கத்தின் பின்னர் சீனாவில் ஒரேநாளில் கூடிய புதிய கொரோனாத் தொற்றாளர்கள் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



உலக நாடுகள் கொரோனா வைரஸ் தொற்றினைக் கட்டுப்படுத்தப் போராடி வருகின்ற நிலையில் சீனா தற்போது கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாவது அலையை எதிர்த்துப் போராடப் பாதிக்கப்பட்ட பகுதிகளை மூடுவதற்கு நடவடிக்கையும் எடுத்துள்ளது. (2)

## அவுஸ்திரேலிய காட்டுத்தீயில் சிக்கி 3 பில்லியன் விலங்குகள் பாதிப்பு
### ஆய்வில் விஞ்ஞானிகள் தகவல்

(கன்பரா)

அவுஸ்திரேலியாவில் கடந்த ஆண்டில் பேரழிவை ஏற்படுத்திய காட்டுத்தீயினால் சுமார் 3 பில்லியன் விலங்குகள் உயிரிழந்துள்ளதுடன் சில விலங்குகள் இடம்பெயர்ந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இது "நவீன வரலாற்றில் மிக மோசமான வனவிலங்கு பேரழிவுகளில் ஒன்றாகும்" என்று இயற்கைக்கான உலக ளாவிய நிதியம் (WWF) தெரிவித்துள்ளது.

கடந்த கோடையில் ஏற்பட்ட காட்டுத் தீப்பிழம்புகள் ஒவ்வொரு அவுஸ்திரேலிய மாநிலத்திலும் பரவி 33 பேர் உயிரிழந்தனர்.

அவுஸ்திரேலியா முழுவதும் உள்ள பல பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 10 விஞ்ஞானிகள் குழு பாலூட்டிகள், ஊர்வன, பறவைகள் மற்றும் தவளைகளில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தமை குறித்து ஆய்வு செய்துள்ளார்கள்.



வனவிலங்குகள் மற்றும் வாழ்விடங்களை மீட்பதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் 50 மில்லியன் டொலர்களை வழங்குவதாக உறுதியளித்துள்ளது. ஆனால் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அவுஸ்திரேலியாவை அதன் பாதுகாப்பு சட்டங்களை வலுப்படுத்த அழைப்பு விடுத்துள்ளனர். (2)

## ரின் 72 ஆவது நினைவுதினம்
## ரிகளுக்கு துப்பாக்கிகள் வழங்கிய கிம்



நீண்ட நாட்களுக்குப் பின் வட கொரியத் தலைவர் கிம் ஜாங் உன் பொது நிகழ்ச்சியில் கலந்து கொண்ட காட்சிகள் தற்போது சமூக வலைத்தளத்தில் வெளியாகியுள்ளன.

கொரோனா அச்சுறுத்தல் உலக நாட்டையே அச்சுறுத்தி வரும் நிலையில், வடகொரியாவில் கொரோனாத் தொற்று இல்லை என்பதை உணர்த்தும் விதமாக அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் யாரும் முகக் கவசம் அணிந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2)

## ப்பூசி பரிசோதனை இறுதிக் கட்டத்தில்;
## றும் என ட்ரம்ப் நம்பிக்கை



வித்தார். அமெரிக்காவில் அரசுடன் இணைந்து மாடர்னா நிறுவனம் தயாரிக்கும் தடுப்பூசி சோதனை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது என்றும் இறுதிக் கட்டச்சோதனையில் 30 ஆயிரம் தன்னார்வலர்களுக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

உலகிலேயே மிகப்பெரிய இந்தத் தடுப்பூசிச் சோதனை வெற்றி பெற்றால் 2020 இறுதிக்குள் ஒரு மில்லியன் தடுப்பூசிகளைத் தயாரிக்க மாடர்னா நிறுவனம் திட்டமிட்டுள்ளது என்றும் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (2)

## மலேசியாவின் முன்னாள் பிரதமருக்கு 12 ஆண்டுகள் சிறைத்தண்டனை

(கோலாலம்பூர்)

பல மில்லியன் டொலர் நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றத்திற்காக மலேசியாவின் முன்னாள் பிரதமர் நஜீப் ரஸாக்கிற்கு 12 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து மலேசிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவருக்கு எதிராக முதற்கட்டத்தில் 7 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. இந்த வழக்கு விசாரணை கோலாலம்பூர் உயர்நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

குறித்த குற்றச்சாட்டுகளுக்கான அனைத்து ஆதாரங்களும் முழுமையாக பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதாகவும் அவையனைத்தும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணமாகியுள்ளதாக நீதிபதி இதன்போது அறிவித்துள்ளார்.

மலேசிய அபிவிருத்திச் சபையின் நிதியை முறைகேடாகப் பயன்படுத்தி முறைகேட்டில் ஈடுபட்டதாகவும் அதிகளவு சொத்துக் குவித்ததாகவும் அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.


அத்தோடு, அரசாங்க நிதி மோசடி தொடர்பாக அவரிடம் சுமார் 16 மாதங்களுக்கு முன்பு விசாரணை ஆரம்பமாகிய நிலையில் நேற்று முன்தினம் நீதிமன்றம் தீர்ப்பை அறிவித்துள்ளது.

அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்ததற்காக அவருக்கு 12 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அதில் நிதி மோசடி குற்றச்சாட்டுக்கள் மற்றும் நம்பிக்கை மீறல் ஆகிய குற்றச்சாட்டுகளுக்காக 10 வருட சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(2)



# நாட்டில் டெங்கு அபாயம்!

## பல மாவட்டங்களுக்கு எச்சரிக்கை



(கொழும்பு)

**நாட்டில் கடந்த நாட்களாக தொடரும் மழையுடனான வானிலை காரணமாக பல மாவட்டங்களுக்கு டெங்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

அதன்படி கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி மற்றும் இரத்தினபுரி ஆகிய பகுதிகளுக்கே இவ்வாறு டெங்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகராட்சி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் 50 சதவீத டெங்கு நுளம்புகளின் இனப்பெருக்கத்திற்கு உகந்த களமாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

நிலவும் மழையுடனான வானிலை தொடர்ந்தால், டெங்கு நுளம்புகள் பரவுவதைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் தற்போதைய நிலைமை மோசமாகிவிடும் என்றும் எச்சரித்துள்ளது. (ஐ-4)

# மத்திய கலாசார நிதியத்தில் 11 பில்லியன் ரூபா நிதி மோசடி



(கொழும்பு)

மத்திய கலாசார நிதியத்தில் 11 பில்லியன் ரூபாவரை நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. 2016 - 2019 ஆம் ஆண்டுகளுக்கிடையில் மத்திய கலாசார நிதியத்தில் இடம்பெற்ற முரண்பாடுகள் மற்றும் முறைகேடுகள் குறித்து ஆராய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நியமித்த குழு தொகுத்த அறிக்கையிலேயே இந்த தகவல்கள் வெளிபடுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் மத்திய கலாசார நிதியத்தில் பல நிதி முரண்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் குறித்த குழுவினர் பிரதமரிடம் சமர்ப்பித்த 142 பக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-4)

# வெளிநாட்டிலுள்ளவர்களை அழைத்து வரும் பணிகள் மீள ஆரம்பம்

(கொழும்பு)

கொவிட் -19 தொற்று நோயால் வெளிநாடுகளில் சிக்கித் தவித்த இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் செயற்பாடானது நாளை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதன்படி நாளை 31 மற்றும் மறுநாள் முதலாம் ஆம் திகதிகளில் ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து சிக்கித் தவித்த இலங்கைப் பிரஜைகளுடன் இரு விமானங்கள் நாட்டை வந்தடையவுள்ளதாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் அட்மிரல் ஜெயநாத் கொலம்பேஜ் தெரிவித்தார்.

இந்த இரண்டு விமானங்களினூடாக சுமார் 600 இலங்கையர்கள் நாட்டை வந்தடையவுள்ளனர்.

அடுத்த சில விமானங்கள் முக்கியமாக மத்திய கிழக்கு, குறிப்பாக சவுதி அரேபியா மற்றும் ஜோர்தான் போன்ற நாடுகளை மையமாகக் கொண்டு திட்டமிடப்பட்டுள்ளன.

அட்மிரல் ஜெயநாத் கொலம்பேஜ் மேலும் கூறுகையில், வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் 50 ஆயிரம் இலங்கையர்கள் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்று கோரி தங்களது தொடர்புடைய தூதரகங்களில் பதிவு செய்துள்ளனர்.

கொவிட் -19 தொற்று நோயால் இந்த இலங்கையில் பெரும்பான்மையானவர்கள் வேலை மற்றும் வசிப்பிடங்களை இழந்துவிட்டதால், அவர்களுக்கு உதவுவதும், திருப்பி அனுப்புவதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும் எனத் தெரிவித்தார்.

அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டவுடன் இந்த இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவது மற்றும் வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்படும் என்றும் கொலம்பேஜ் மேலும் கூறியதுடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த விசேட திட்டம்

(கொழும்பு)

நாட்டில் இடம்பெறும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் விசேட திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது எனப் போக்குவரத்து அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் தாம் மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளருக்கு உரிய பணிப்புரைகளை வழங்கியுள்ளதாகவும், அதற்கிணங்க நாட்டின் அனைத்து சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள் தொடர்பில் கண்காணிப்புகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாரதிகளின் முறையான பயிற்சிகள் இல்லாத காரணத்தாலேயே நாட்டில் வீதி விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ-4)

# இன்று ஒரு தகவல்

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## இடம் எதுவானாலும்...

ஒரு அலுவலகத்திலே இரண்டு பேர் பேசிக்கொண்டு இருந்தார்கள். " என்ன இது? நேற்று வரைக்கும் இவர் நம் கூட சகஜமாக பேசி பழகிக் கொண்டிருந்தார். இன்றைக்கு நம்மளைப் பார்த்து விட்டு பார்க்காதது போல போகின்றார்" என்றார் ஒருத்தர். " ஒன்றுமில்லை அவருக்கு பதவி உயர்வு வந்து விட்டது. அதனால் அவருக்கு நம் கூட நின்று பேசினால் அது அவருக்கு கௌரவக் குறைச்சல் என்று நினைக்கிறார். அது தான் அப்படி போகின்றார் " என்றார் இன்னொருத்தர். சராசரி மனிதன் இது மாதிரி சபலங்களுக்கு ஆளாகுகின்றது சகஜம். ஆனால் சில பேர் இப்படிப்பட்ட பாதிப்புகளுக்கு உள்ளாவதில்லை. அது ரொம்ப அபூர்வம். இஸ்ரேல் தேசத்துக் கதை ஒன்று உண்டு. ஒரு காலத்திலே அந்த நாட்டு அரசனைத் தேர்ந்தெடுக்கின்றது தெய்வத்தினுடைய செயலாக இருந்ததாம். ஒரு விசித்திரமான பறவை ஒன்று உண்டாம். இதற்கு 'சந்தோசப் பறவை' என்று பெயராம். ஏற்கனவே இருக்கின்ற ராஜா இறந்து போனால் உடனே அந்தப் பறவை வானவெளியில் இருந்து பறந்து வருமாம். அப்படி அது பறந்து வந்து யார் தலையிலே முதலில் உட்காருகின்றதோ, அவர் தான் அந்த நாட்டுக்கு ராஜாவாம். இது அங்கே வழக்கம். ஒரு சமயம் ராஜா இறந்து போனார். எல்லோரும் ஆகாயத்தைப் பார்த்தார்கள். சந்தோசப் பறவை பறந்து வந்தது. யார் தலையிலே அது உட்காரப் போகின்றதோ என்று எல்லோரும் ஆவலோடு பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அந்தப் பறவை நேராக வந்து அங்கே நின்று கொண்டிருந்த அடிமையின் தலையிலே உட்கார்ந்து விட்டது. அந்த அடிமை எந்த கோலத்தில் இருந்தான் தெரியுமா?

தோளிலே மத்தளம், இடுப்பிலே ஆட்டுத்தோல், தலையிலே இறகுகள் வைத்த தொப்பி. வீடுகளிலே ஏதாவது விஷேசம் என்றால் ஆடிப்பாடுகின்றவன் அவன். யாராக இருந்தால் என்ன? சந்தோசப் பறவை உட்கார்ந்தால் உட்கார்ந்தது தானே. அந்த அடிமையை உடனே அந்த நாட்டு மக்கள் ராஜாவாக ஏற்றுக் கொண்டார்கள். அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு போய், அரியணையிலே உட்கார வைத்தார்கள். அந்த அடிமை ராஜா என்ன செய்தார் தெரியுமா? அரண்மனைக்கு பக்கத்திலே சின்னக் குடிசை கட்டச்சொன்னான். அந்தக் குடிசைக் குள்ளே தன்னிடம் உள்ள மத்தளம், ஆட்டுத்தோல் உடை , தொப்பி எல்லாவற்றையும் பத்திரமாக வைத்தான். அதற்கு பக்கத்திலேயே ஒரு பெரிய நிலை கண்ணாடியையும் வைத்தான். இவன் இப்படி செய்கின்றதைப் பார்த்ததும் அங்கே இருந்த அமைச்சர்களுக்கெல்லாம் ஒரே ஆச்சரியம். இருந்தாலும் யோசனை செய்தார்கள். ஒரு தேசத்திற்கு ராஜாவாக இருக்கின்றவர் இப்படி எல்லாம் செய்வது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அதனாலே அவர்கள் எல்லாம் சேர்ந்து ராஜாவிடம் போனார்கள், மெதுவாகச் சொன்னார்கள். " அரசே, நீங்கள் தனியாக இருக்கின்ற போது கூட உங்களுடைய ராஜ கௌரவத்தை நன்றாக காப்பாற்றிக் கொள்ளத்தான் வேண்டும்'' என்று ஆலோசனை சொன்னார்கள். அதுக்கு அந்த அரசன் சொன்னான். அரசனாவதற்கு முதல் நான் ஒரு அடிமையாகத் தான் இருந்தேன். இப்பவும் அடிக்கடி அதை நினைவு படுத்திக் கொள்கின்றேன். அப்போது தான் உங்களையும் மற்றவர் களையும் விட நான் உயர்ந்தவன் இல்லை என்கின்றது எனக்கு உறைக்கும். மனதிலேயும் அகங்காரம் உண்டாகாது என்றாராம் அந்த அரசன்.

இது இஸ்ரேல் தேசத்துக் கதை.

அதனால் நம்முடைய நாற்காலிகள் மாறலாம்.

அதற்காக... நம்முடைய பண்பு மாறிவிடக் கூடாது.

மனிதர்களுக்கு இடையிலே இருக்க வேண்டிய மரியாதை குறைந்து விடக் கூடாது. ஒரு அலுவலகம் , அதிலே ஒரு பெரிய அதிகாரி.

அவர் தான் டைரக்டர். அவருக்குக் கீழே உதவி டைரக்டர்... அதற்குக் கீழே மனேஜர், கிளார்க், பியூன் இப்படி எல்லோரும் இருக்கின்றார்கள்.

அந்த டைரக்டர் எப்படி என்றால்... அவருக்கு அடுத்த படியாக இருக்கின்ற உதவி டைரக்டரிடம் தான் பேசுவார். அதற்குக் கீழே இருக்கிறவர்களிடம் முகம் கொடுத்துப் பேச மாட்டார்.

யாரும் அவரை நேரடியாக சந்திக்க முடியாது. எதுவாக இருந்தாலும் Through proper channel என்பார். உதவி டைரக்டரிடம் நீங்கள் பேசுங்கள்... அவர் தான் என்னிடம் பேச வேண்டும் என்பார். அவர் தான் என்னிடம் வர வேண்டும் என்பார்.

அப்படி ஒரு சுபாவம்.

அப்படிப்பட்ட டைரக்டர் ஒரு நாள் அலுவலக வாசலிலே ஒரு காரிலே அடிபட்டு கிடக்கின்றார்.

வாசலிலே நின்று கொண்டிருந்த பியூன் அதைப் பார்த்து விடுகிறார்.

" ஐயையோ... எங்கள் தலைமை அதிகாரி அடிபட்டுக் கிடக்கிறாரே " என்று தூக்க ஓடினார்.

இதைப் பார்த்ததும் அந்த டைரக்டர் " நோ! " என்று கத்தினார்.

" நீ வராதே... ஓடிப் போய் உதவி டைரக்டரை வரச் சொல்லு " என்று உத்தரவு போட்டார். இது எப்படி இருக்கு?

# எம்.சி.சி. ஒப்பந்தத்தில் அரசு கைச்சாத்திடாது

## ரமேஷ் திட்டவட்டம்



(கொழும்பு)

அமெரிக்காவுடன எம்.சி.சி. உடன்படிக்கையில் தற்போதைய அரசாங்கம் எந்த வகையிலும் கையெழுத்திடாது எனவும் இந்த உடன்படிக்கையை எதிர்காலத்தில் நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பித்து எம்.சி.சி உடன்படிக்கை தொடர்பான கதையை முற்றாக நாட்டில் இருந்து ஒழிக்கப் போவதாகவும் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

அம்பாலங்கொடை கஹாவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எம்.சி.சி. உடன்படிக்கை தொடர்பாக ஆராய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விசேட குழுவை நியமித்தார்.

அந்த உடன்படிக்கை நாட்டுக்கு உகந்தது அல்ல என அந்தக்குழு தீர்மானித்துள்ளது. இதனால் எந்தவகையிலும் எமது அரசாங்கம் அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடாது.

எதிர்க்கட்சி எம்.சி.சி உடன்படிக்கையை பிடித்துக்கொண்டு குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முயற்சித்தாலும் அது நிறைவேறாது மக்கள் விடுதலை முன்னணிக்கு போராட்ட கோஷங்கள் இல்லாத நிலையில். இந்த உடன்படிக்கையை பிடித்துக் கொண்டு துள்ளுவதில் பயனில்லை.எமது அரசாங்கம் எம்.சி.சி. உடன்படிக்கையில் கைச்சாத்திடாது. இதனால் நாட்டு மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என அவர் தெரிவித்தார். (ஐ-4)

# தற்கொலை குண்டுத்தாக்குதலின் சூத்திரதாரி சஹ்ரான் இல்லை!

## காலம் கடந்து வெளிவந்த தகவல்



**(கொழும்பு)**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி சஹ்ரான் ஹாசிம் இல்லை. நவ்பர் மௌலவி என்ற நபரே என தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் இயக்குநர் நிலாந்த ஜெயவர்த்தன தகவலை வெளியிட்டுள்ளார்.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் நேற்று முன்தினம் சாட்சியமளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் சாட்சியமளிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மேற்கொண்ட குழுவினருக்கு தலைமை தாங்கிய சஹ்ரான் ஹாசிம் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி இல்லை என்றும் கட்டாரில் 19 வருடங்களாக வசித்த, சர்வதேச தொடர்புகளை பேணி வந்த நவ்பர் மௌலவி என்பவரே தாக்குதலின் சூத்திரதாரி என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், தாக்குதலொன்று இடம்பெறலாம் என்பது குறித்து பத்துமாதங்களுக்கு முன்னரே புலனாய்வுப்பிரிவின் தலைவர் சிசிர மெண்டிஸிடம் தெரிவித்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ-4)

# எம் நாடே பயங்கரவாதத்தை இல்லாதொழித்த ஒரே தேசம்

## இப்படிப் புலம்புகிறார் சரத் வீரசேகர



(கொழும்பு)

எம் நாடு மாத்திரமே பயங்கரவாதத்தை இல்லாதொழித்த ஒரே நாடு என ஓய்வுபெற்ற அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

"பயங்கரவாத இயக்கத்தை இல்லாமல் செய்த இராணுவ அதிகாரிகளை ஒருசில மேற்குலக அரசாங்கங்கள் இலக்கு வைத்து மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டதாக குற்றஞ் சாட்டுகின்றவே. அந்த நாடுகள் ஏன் இப்படிச் செயற்படுகின்றன?" என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

நேட்டோ படைகளால் தலிபான் தீவிரவாதிகளை தோற்கடிக்க முடியாத நிலையில், எமது படையினர் புலிப் பயங்கரவாதிகளைத் தோற்கடித்தனர்.

இலங்கை மாத்திரமே பயங்கரவாதத்தை இல்லாதொழித்த ஒரே நாடு. எமது சாதனையையிட்டு மேற்குலக நாடுகள் பொறாமை கொண்டுள்ளன.

பயங்கரவாதிகளுக்கு எதிரான செயற்பாடுகளை ரத்து செய்யுமாறு மேற்குலக நாடுகள் எமக்குக் கூறிய போது நாம் அதற்கு செவிசாய்க்கவில்லை. (ஐ-4)




## ஒய்யார வடிவழகனை வாழ்த்திடுவோம்

நல்லை நகர் நாதனே எம் கோனே
அசுரர்களின் கொட்டத்தை அடக்கியவனே
நாதனுக்கே நாதனாகி
சுவாமி நாதன் ஆனவனே
வேலவனுக்கு மகா உற்சவம் காண
வக்கற்ற அபாக்கியசாலிகள் நாம்
வல்வினை தீர கொடிய நோய் தீர
நல்லையம்பதி சிகாமணியே
ஒய்யார வடிவழகனை மனதார
மானசீகமாக வாழ்த்திடுவோம்

*எஸ்.எஸ்.உமாசிவம்*
*ஏழாலை*

## நல்லைக் குமரனை நாடு!

ஓ மெனும் பிரவண ஒலிதான் - அண்டம்
ஓயாது ஒலிப்பதும் அதுதான்
ஆமதே ஒலியாய் வருமாம் - அதுவே
அகிலமாய் உருண்டு தருமாம்
அண்டத்தில் அருட் பெருஞ்சோதி
அத்தனை உயிரிலும் சோதி
பிண்டத்தில் அதன் திறன் பாரீர் - ஞானம்
பேணியே நல்லைக் குமரனை நாடு!

*புலவர் செ.பரமநாதன்,*
*மண்டைதீவு-02.*

## நல்லூர் வேலவனே

கல்லான நெஞ்சம் கரைந்துருகுமே
கந்தாவுன் கருணை கண்டு
மெல்லச் சிரிக்குமுன்
முகம் பார்த்தால்
மேனி சிலிர்க்குதே பக்தி கொண்டு
நெல்லுக்குள் இருக்கும் மணிபோலென்
நெஞ்சுக்குள் இருக்கும் நாயகனே
சொல்லுக்குள் பொருளாயுறையும் சோதியே
சொக்க வைக்கும் அழகு
நல்லூர் வேலவனே

*விஜியகண்ணன்,*
*யாழ்ப்பாணம்.*

## சந்தம் சிந்தும் நல்லைக் கந்தன்

ஊமை யாக வாய் மொழியா
துறைந்த குமர குருபரர்
சேம மாக வுள்ளம் நொந்து
சேயன் பாதம் பற்றவே
பாம ழையே பொழியும் வழியும்
பைந்த மிழ்ப்பா சுற்றவே
தேம துரந் திகழ்ந்து விளங்கச்
செய்யும் நல்லைக் கந்தனே!

*கலாபூஷணம் சந்தக்கவிஞர்.*
*நவ.பாலகோபால்*

# வாக்காளர்,வேட்பாளர்கள், ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் வணக்கம்!



என்னை பற்றி பலர் அறிந்தும், குறிப்பாக இளைய தலைமுறையினர் சிலர் அறியாமலும் இருக்கலாம். எக் காரணம் கொண்டும் எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் எவரோடும் முரண்பட்டவனல்ல. சிலருடன் மட்டும் சில சந்தர்ப்பங்களில் வேறுபட்ட கருத்துக்கள் வைத்துக் கொண்டிருக்கலாம். வயதால் 87ஐ தாண்டிய நான் அரசியலில் 70 ஆண்டுகளுக்கு மேல் தீவிரமாக செயற்பட்டுள்ளேன். நாடளாவிய ரீதியாக பார்த்தால் சிரேஷ்ட அரசியல் தலைவர்களில் நானும் ஒருவன். இலங்கை சுதந்திரம் அடைந்த பின் இன்று வரை அரசியலில் தீவிரமாக உழைத்த பல பிரமுகர்கள், அரசியல்வாதிகள், கட்சித் தலைவர்கள் ஆகியோருடன் நட்புடன் பழகியும், அத்தகைய பலரின் சிந்தனைகள் பற்றியும் அறிந்துள்ளேன். நாட்டில் நடந்த நல்ல, கெட்ட பலவற்றையும் நேராக கண்டவர்களில் நானும் ஒருவன்.

இத்தனையையும் உங்களுக்கு தெரிவிப்பதற்கு ஒரு காரணம் உண்டு. பல சந்தர்ப்பங்களில் சிலர் என்னைப்பற்றி தப்பாக பேசியும், எழுதியும் உள்ளனர். தப்பாக பேசியதற்கு காரணம் என் வயது முதிர்ச்சியால் ஏற்பட்ட இடைவெளியில் நடந்த என்னைப்பற்றிய நிகழ்வுகள் திரித்துக்கூறப்பட்டு வந்தமையே. இன்றும் துரதிர்ஷ்டவசமாக அதே நிலை தான். நாட்டில் நடைபெற்ற தேர்தல்களில் ஒருசிலவற்றைத்தவிர ஏனைய பாராளுமன்ற உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் வெற்றியும் தோல்வியும் கண்டவன் நான்.இந்த தள்ளாத வயதில் இவருக்கு ஏன் இந்த தேர்தல் என்ற கேள்வி உங்களில் அநேகரின் உள்ளத்தில் எழலாம். ஆகவே பல உண்மைகளை உங்கள் முன் வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். நான் எப்போதும் உண்மையே பேசுபவன், என் மனக்கஷ்டத்தை உங்களிடம் கூறி ஆறுதல் அடைய விரும்புகிறேன்.

இறுதி நாட்களில் எனக்கு மன அமைதி வேண்டும். வழமைக்கு மாறாக 36000 வாக்குகளை தந்து 9 உறுப்பினர்களில் முதலாவதாக உங்கள் பாராளுமன்ற உறுப்பினராக என்னை தெரிவு செய்து, என்னும் மூன்று ஆண்டுகளுக்கு மேல் காலம் இருக்கக் கூடியதாக நியாயப்படுத்த முடியாத காரணத்தால் மன்றம் கலைக்கப்பட்டது. தொடர்ந்து நடந்த தேர்தலில் படு மோசமான முறையில் சட்டவிரோதமாக செயற்பட்டு என்னை முற்றுமுழுதாக முடக்கி வைத்து வாக்களிப்பதை தடுத்ததோடு இன்னும் பல மோசடிகள் செய்து அப்பாவி இளைஞர்கள், யுவதிகள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரை மோசமான முறையில் ஆள்மாறாட்டம் செய்ய வைத்து ஒரு தடவையல்ல இரண்டாம் மூன்றாம் முறையும் என்னை தோற்கடித்தனர். கிளிநொச்சி தொகுதியை தனிமாவட்டம் ஆக்க நான் பட்ட கஷ்டம், வாங்கிய திட்டுக்கள் கணக்கில் அடங்கா.அதன் பயனாலேயே கிளிநொச்சி ஏழை மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பெற வாய்ப்பு கிடைத்தது. அத்தகையோரை சட்ட விரோத செயல்களுக்கு உபயோகித்தமை அவர்கள் அநேகரின் எதிர்காலத்தை பாதித்திருக்கும் என்பது எனது கணிப்பாகும். இத்தகைய செயல்களை நான் என்றும் செய்ததில்லை.

இளைய தலைமுறையினருக்காக தொடர்ந்து நடந்த பாராளுமன்ற தேர்தல்கள் எப்படி நடந்ததென்று அறிந்தால் அநேகர் அதிர்ச்சியடைவீர்கள். ஏறக்குறைய அத்தனை தேர்தல்களிலும் ஜனநாயகம் தோற்கடிக்கப்பட்டு சில அமைப்புகள் சட்ட விரோதமாக பாராளுமன்றம் சென்ற வரலாற்றை நீங்கள் அறிந்திருந்தால் போதும். எவரையும் எந்த அமைப்பை பற்றியும் நான் சுட்டிக்காட்ட விரும்பவில்லை. ஆனால் உலகளாவிய தமிழர்கள் பெரும் கௌரவம் இன்றும் கொடுக்கின்ற அமரர்கள் தந்தை செல்வா, பெரியார் ஜீ.ஜீ. பொன்னம்பலம், அன்பர் அமிர்தலிங்கம், சிவா அண்ணன் ஆகிய இவர்களின் பெயர்களை உச்சரிக்கும் தகுதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு இல்லை. தந்தை செல்வாவின் தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியுடனும் வேறு சில கட்சிகளுடன் இணைந்து அமைத்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பெயரை மனசாட்சிக்கு விரோதமாகவும், முறையற்ற வகையிலும் தொடர்ந்து துஷ்பிரயோகம் செய்து பல வகையிலும் மோசடி மூலம் பெரும் இலாபத்தை அடைகின்றனர் என்பதை ஆதாரத்துடன் நிருபிப்பேன்.

இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் அப்பாவி தமிழ் மக்களே. ஆகவே சுயேட்சையாகவும் பல்வேறுகட்சிகளில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களும், தமிழ் மக்களும் தமது ஆதரவை தந்தால் முறையற்ற வகையில் பறித்தெடுக்கப்பட்ட மக்களின் ஜனநாயக உரிமையையும் சுயகௌரவத்தையும் மீண்டும் தமிழர் விடுதலைக் கூட்டணி உங்களுக்கு பெற்றுத்தரும். போதிய காலமிருப்பதால் இளம் தலைமுறையினர் இத்தகைய குளறுபடிகள் நீக்கப்பட்டு நேர்மையான தேர்தல் வரும் வரை காத்திருந்து நேர்மையாக பாராளுமன்றம் செல்ல வேண்டும் என்பதே எனது வேண்டுகோள். நீங்கள் ஒத்துழைத்தால் அந்த நிலைமையை என்னால் உருவாக்க முடியும்.

பாராளுமன்ற கால எல்லையை பொதுஜன வாக்கெடுப்பு மூலம் கூட்டியதை ஆட்சேபித்து 16 உறுப்பினர்கள் 6 ஆண்டுகளுக்கு உரிய பதவியை இராஜினாமா செய்து ஜனநாயகத்தை காப்பாற்றியவர்களை அகில உலகமும் பாராட்டியது. அவர்களில் என்னையும் திரு. சம்பந்தன் அவர்களையும் தவிர ஏனையோர் இறந்து விட்டனர்.

இத்தகைய சாதனையை செய்த திரு. சம்பந்தன் மோசடி மூலம் 22 பேருடன் பாராளுமன்றம் செல்ல எப்படி மனம் வந்தது. விடுதலைப் புலிகளை அழித்த தளபதியை ஜனாதிபதி தேர்தலில் ஆதரித்தமையை அந்த அப்பாவி ஜீவன்களுடைய உற்றார்,உறவினர்கள் இட்டிருக்கக்கூடிய சாபம் லேசுப்பட்டதா? இதற்குமாறாக நான் எவ்வாறு செயற்பட்டேன் என்பதையும் திரு. சம்பந்தன் அவர்கள் எவ்வாறு நடந்து கொண்டார் என்பதையும் அனைவரும் அறிய விபரம் கீழே தந்துள்ளேன். உங்கள் வீடுகளுக்கு வர முடியாமல் போனதற்கு மன்னிப்புக்கூறி எங்கள் சின்னமாகிய உதயசூரிய னுக்கு வாக்களிக்குமாறு வேண்டுகிறேன். எவ்வாறு 22 பேர் எந்த இலட்சணத்தில் பாராளுமன்றம் சென்றார்கள் என்பதை பார்ப்போம்.

கூட்டணி வேட்பாளர்களை தாக்கியமை. ஆள்மாறாட்டம் செய்தமை, மினிபஸ், துவிச்சக்கரவண்டிபோன்றசகல வாகனங்களையும் ஒருநாளுக்கு மேல் சொந்தமாக்கி ஏனையவர்களை கொதிக்கும் வெயிலில் நடக்க விட்டமை. பதிவு செய்யப்படாத 48 மோட்டார்சைக்கிள்களும், 2 ஜீப்வண்டிகள் உட்பட 84 வாகனங்களை சட்டவிரோதமாக உபயோகித்து ஏமாற்றியமை. வாக்காளர்கள் வாக்களித்தல், பிரசாரத்தில் ஈடுபடுதல் போன்ற உரிமையை மறுத்து கீழ்த்தரமான வார்த்தைகளை உபயோகித்து நடத்திய தெருக்கூத்தை வற்புறுத்தி பார்க்க வைத்து மக்களை துன்புறுத்தியமை. 552 வாக்களிப்பு நிலையங்களில் 1104 முகவர்களை கடமை செய்யவிடாது தடுத்தமை. ஏனையோரின் பிரசாரங்களில் கலந்துகொள்ளவிடாமலும் ஆதரவாளர்களை சந்திக்கவிடாமலும் தடுத்தமை.

பின்வரும் என் கோரிக்கையில் ஒன்றையேனும் நிறைவேற்றியிருந்தால்

1."தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்னியில் அகப்பட்டுள்ள அப்பாவி மக்களை காப்பாற்ற வேண்டும் அன்றேல் தங்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை துறக்க வேண்டும்" அப்படி செய்திருந்தால் பல்லாயிரக்கணக்கான மக்களை காப்பாற்றியிருக்கமுடியும்.

2."எமது மக்களைக் காப்பாற்ற கடைசி சந்தரப்பம்" என்ற தலைப்பில் 16.03.2009 அன்று தம்பி பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில் 87,000 குடும்பங்களைச் சேர்ந்த 330,000 மக்களின் சாபத்திற்கு ஆளாக வேண்டாமென எழுதியிருந்தேன். துரதிர்ஷ்டவசமாக அவர்களிடமிருந்து பதிலெதுவும் கிடைக்கவில்லை. ஆனால் சம்பந்தன் அவர்கள் இதில் கவனம் செலுத்தியிருந்தால் நிலைமை வேறு.

3.2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ம் திகதி முன்னைய ஜனாதிபதியின் செயலாளர் அரசியற் கட்சித் தலைவர்களை நாட்டின் தற்போதைய நிலைபற்றி ஆராயவென 26 ஆம் திகதி சந்திப்பு என அறிவித்திருந்தார். 3 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள் என ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறியவன் நான் மட்டுமே. சம்பந்தன் அல்லது சேனாதிராஜா ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் வந்திருந்தால் பல்லாயிரக்கணக்கான மக்களை பாதுகாப்பான இடத்திற்கு மாற்றியிருக்க முடியும்.

4.ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஶ்ரீ. சிவ் சங்கர் மேனன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை உடனடியாக டெல்லி வருமாறு அழைத்தபோது போக மறுத்து விட்டனர். இந்திய அரசு ஏதோ ஒழுங்கு செய்திருக்க வேண்டும் என நானும் கருதி அவர்களின் செயலை பத்திரிகை ஊடாக கண்டித்தேன். போகாதமைக்கு காரணம் பலர், அப்போது வெளிநாட்டில் தங்கியிருந்தனர்.

5.மே 2ம் திகதி இலங்கை ஜனாதிபதி அவர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளுடன் "உடனடியாக அப்பாவி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டுவரப்படாவிட்டால் அது ஒரு பெரும் அனர்த்தத்தில் முடியும்" என்றும் "அரசுக்கு ஏற்புடையதான ஒரு சர்வதேச அமைப்பை வன்னிக்கு அனுப்புமாறும்" கேட்டிருந்தேன். ஆயுதங்களைக் கையளிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கவும் வேண்டியிருந்தேன்.இவர்கள் தான் அடுத்த தேர்தலில் பாராளுமன்றம் போக வேண்டுமா? அன்றேல் 60 ஆண்டுகளுக்கு மேல் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஒரு மூத்த தலைவருடன் செயற்படக்கூடிய எமது அணியினர் போக வேண்டுமா? என் பதை துன்பம் துயரத்தோடு வாழும் மக்களாகிய நீங்களே தீர்மானியுங்கள்.

வீரசிங்கம் ஆனந்தசங்கரி,
செயலாளர் நாயகம்,
தமிழர் விடுதலைக் கூட்டணி.

# அரச சேவையில் ஊழல்,மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி

## ஜனாதிபதி திட்டவட்டம்

(கொழும்பு)

**ஊழல், மோசடிகளை ஒழித்து வினைத்திறனான அரச சேவையை ஸ்தாபிப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**



15 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் அரச சேவையில் உள்ளனர். எனினும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் முகங்கொடுத்துவரும் பிரச்சினைகள் குறித்து நாளாந்தம் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் குறித்த விடயத்தில் அக்கறை செலுத்துவதாகவும் இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடியை ஒழித்து மக்களுக்காக அர்ப்பணித்த அரச சேவை ஒன்றை ஏற்படுத்துவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவில் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ களுத்துறை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த போது இதனைத் தெரிவித்தார்.

இறக்குமதி வர்த்தக முறைமைக்கு பதிலாக உள்நாட்டு உற்பத்திகளுக்கு முக்கியத்துவமளிக்கும் பொருளாதார செயற்பாடுகளுக்கு அரசாங்கம் வழி செய்துள்ளது. விவசாயம் மற்றும் உற்பத்திகளில் ஈடுபட்டு அதன்மூலம் அதிகபட்சபிரயோசனத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு வருகை தந்திருந்த மக்களிடம் ஜனாதிபதிதெரிவித்தார். நவீன தொழில்நுட்பத்தின் மூலம் விவசாயப் பொருளாதாரம் பலப்படுத்தப்பட வேண்டும்.

அதற்காக விவசாயப் பயிர்களை இறக்குமதி செய்வதை நிறுத்தி, உள்நாட்டு அறுவடைகளுக்கு அதிக விலையை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பட்டதாரிகள் மற்றும் குறைந்தவருமானம் பெறுவோருக்கு ஒரு இலட்சத்து ஐம்பத்தாறாயிரம் தொழில்களை வழங்குதல் தேர்தலின் பின்னர் இடம்பெறும். இந்த அனைத்து சந்தர்ப்பங்களும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவும் என ஜனாதிபதி மக்களிடம் தெரிவித்தார். (ஐ-4)

# பொருளாதார கட்டமைப்பு பலமாக இருந்தால் இனத்தின் இருப்பு பாதுகாக்கப்படும்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்



ஒரு இனம் தனது பொருளாதாரக் கட்டமைப்புகளில் பலமாக இருக்கின்றபோதே அந்த இனத்தின் இருப்பும் பாதுகாக்கப்படும். அதாவது ஒரு தேசிய இனத்தின் தேசியம் பாதுகாக்கப்பட வேண்டுமெனில் அந்த இனம் தனது பொருளாதாரத்தில் மிகவும் பலமாக இருக்க வேண்டும். இனத்தின் பொருளாதாரம் சிதைக்கப்படும் போது இருப்பும் சிதைக்கப்பட்டுவிடும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி உதயநகர் கிராமத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் பிரச்சினை தொடக்கம் வாழ்க்கைப் பிரச்சினை வரையில் ஏராளமான பிரச்சினைகளுக்கு மக்கள் முகம்கொடுக்கின்றனர். எல்லாமே முக்கியமானவை. அரசியல் தீர்வு கிட்டும் வரையில் கல்வியில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சி, வேலை வாய்ப்பின்மை, பொருளாதாரப்பின்னடைவு, வளப்பகிர்வில் உள்ள பாரபட்சங்கள், குறைபாடுகள், சூழல்பாதுகாப்பு, எதிர் நோக்கும் சவால்கள் போன்றவற்றுக்கு தீர்வு காணாமல் இருக்க முடியாது. முதலில் நாம் எமது மக்கள் எதிர்கொள்கின்ற இவ்வாறான அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை காணவேண்டும். இதுவே இனத்தின் இருப்பை தக்க வைக்கும். இவை எல்லாவற்றுக்கும் மிக விரைவான முறையில் தீர்வைக் காண வேண்டும். தமிழ்ச்சமூகத்தைதொடர்ந்தும் பிரச்சினைகளுடன் வாழ வைக்க முடியாது. பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் மூலமே எமது மக்களை வளர்ச்சியை நோக்கி முன்னோக்கி நகர்த்தமுடியும். எமது மக்களின் வளர்ச்சியே எமது இனத்தைப் பாதுகாப்பதற்க வலுவைக் கொடுக்கும். எமது தேசிய அடையாளத்தைப் பாதுகாக்கும் என மேலும் தெரிவித்தார். (ஐ-2)

# பாராளுமன்ற சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல் கையளிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

பொதுத் தேர்தலின் பின்னர் பாராளுமன்றம் கொவிட் -19 சவாலுக்கு முகங்கொடுத்து சுகாதாரப் பாதுகாப்புடன் அமர்வுகளை முன்னெடுப்பதற்குத்தேவையான சுகாதார வழிகாட்டல் தொகுப்பு நாளை வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்துக்கு கையளிக்கப்படுமென சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் லக்ஷ்மன் கம்லத் தெரிவித்தார்.

பாராளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவிடம் இந்த வழிகாட்டல் தொகுப்பு கையளிக்கப்படவுள்ளது.


சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை தயாரிக்கும் போது பாராளுமன்ற சபா மண்டபம், உணவுக் கூடம் மற்றும் பாராளுமன்ற நூல் நிலையம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவிருப்பதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் லக்ஷ்மன் கம்லத் தெரிவித்தார்.

பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவின் வேண்டுகோளுக்கிணங்க சுகாதார அமைச்சின் ஊடாக இந்த வழிகாட்டல் தொகுப்பு தயாரிக்கப்படவுள்ளது. (ஐ-4)

## உறுப்புரிமை நீக்கப்பட்ட பலர் ரணிலுடன் பேச்சு

# பெயர்கள் வெளியிடுவதை தாமதப்படுத்த ஐ.தே.க. தீர்மானம்

(கொழும்பு)



சஜித் அணியில் செயற்பட்ட நிலையில் கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்ட பலர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளனர். தேர்தலின் பின்னர் மீண்டும் கட்சியுடன் இணைந்து நேர்மையாகச் செயற்படுவதாக வழங்கப்பட்ட உறுதிமொழியையடுத்து நீக்கப்பட்டவர்களின் பெயர்கள் வெளியிடுவதை ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு தாமதப்படுத்தியுள்ளது.

கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியில் இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேசியுள்ளனர்.

அதற்கமைய கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்டுள்ள 54 வேட்பாளர்களின் பெயர்களை சில தினங்களுக்கு வெளியிடாமல் இருக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் செயற் குழுவிற்கு அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தீர்மானத்திற்கு முரணாக ஐக்கிய மக்கள் சக்தியில் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனு தாக்கல் செய்துள்ள உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட 102 பேருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் அவர்களில் 54 பேருடைய உறுப்புரிமையை நீக்குவதற்கு நேற்று தீர்மானிக்கப்பட்டது.

கட்சி தலைமைத்துவத்தின் ஆலோசனைக்கமைய ஏனைய உறுப்பினர்களின் உறுப்புரிமையை நீக்குவதை ஒத்திவைப்பதற்கு செயற்குழு தீர்மானித்துள்ளது.

ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கட்சி உறுப்புரிமையை நீக்குவது ஒத்திவைக்கப்பட்டுள்ளவர்கள் கட்சி தலைவருடன் இணக்கப்பாட்டுடன் செயற்படுவதாக உறுதியளித்துள்ளதோடு இவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தொடர்பில் இறுதித் தீர்மானத்தை பொதுத் தேர்தலின் பின்னர் எடுப்பதற்கு கட்சி தலைமைத்துவம் தீர்மானித்துள்ளது. (ஐ-4)

# பொதுஜன பெரமுனவினால் மட்டுமே ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த முடியும்



(கண்டி)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் மட்டுமே நாட்டில் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த முடியும் என முன்னாள் அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிற்கு ஸ்திரத்தன்மை மற்றும் திறமையான ஆளுகை தேவை என்றும், எனவே நாடாளுமன்றத்திற்கு திறமையானவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என பொது மக்களை கேட்டுக்கொண்டார்.

நாடு ஒரு தீர்க்கமான தேர்தலை எதிர்கொள்கிறது என்றும் வாக்காளர்கள் ஒரு நிலையான நாடாளுமன்றம் தேர்ந்தெடுக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

ஒரு நிலையான மற்றும் திறமையான அரசாங்கத்தை நியமிப்பதன் மூலம் நாடு எதிர்கால சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# நல்லவர்க்கெல்லாம் சாட்சிகள் உண்டு

*ஆம், உண்மை ஒன்றாக இருக்க, பொய்மை மேலே முந்தாடும் போது, அது கண்டு பேசாதிருப்பது அதர்மத்திற்கு ஆதரவு வழங்குவது போலாகும் என்பதால், நல்லவர்களுக்கு இருக்கக் கூடிய சாட்சியாக இத்தொடர் சான்றாதாரப்படுத்தப்படுகிறது.*




நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனின் வீடு தேடிச்சென்று அவரை அழைத்துவந்து வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராக்கிவிட்டு, அவருக்கு நீங்கள் வழங்கிய ஒத்துழைப்பு என்ன? என்பதை யோக்கியம் உள்ள எவரேனும் எழுந்து நின்று சொல்லட்டும் பார்க்கலாம்.

வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராக வேண்டும் என்று நினைத்தவர்கள் நீதியரசர் விக்னேஸ்வரனைப் படுத்திய பாடு கொஞ்சமா?.

இதுதான் என்றில்லை. வடக்கு மாகாண சபையின் பதவிகளில் நடுவுநிலை வகிக்க வேண்டிய ஒருவர் விக்னேஸ்வரனைப் பதவியில் இருந்து துரத்தினால் அந்த இடைக் காலத்தில் தான் முதலமைச்சராக இருக்க முடியும் என்பதற்காகச் செய்த அநியாயங்களை தமிழ்த்தாய் மன்னிப்பாளா?

இன்று முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் எதுவும் செய்யவில்லை என்று அரங்கேறி ஆர்ப்பரிப்பவர்கள் அன்று ஏய் மனிதர்களே! நீதியரசர் விக்னேஸ்வரன் இயங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் என்று ஒரு வார்த்தை கூறியிருந்தால், அவர்கள் இப்போது கூறுகின்ற குற்றச்சாட்டைப் பணிந்து ஏற்றிருக்க முடியும். இதைவிடுத்து ஒருபக்கமாக நின்று கருத்துரைப்பது தர்மமன்று.

சொந்தக் கோபங்களுக்காக ஒரு நேர்மையாளனைப் பழி தீர்த்து விடாதீர்கள். அது மிகப்பெரும் பாவச் சொத்தாகி விடும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தடம்மாறிப் பயணித்தது என்பதை அவர்களே ஏற்றுக் கொள்வர். தமிழ்மக்களின் எதிர்காலம் அந்தோ என்றாகிப் போகிறது என்றுணர்ந்ததாலேயே தமிழ் மக்கள் பேரவை உருவாகியது.

தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கம் கண்டு வெகுண்டெழுந்தவர்களை ஒரு கணம் பொதுவெளியில் நிறுத்திப் பாருங்கள் அவர்களிடம் நியாயத்துவம், நீதித்துவம் ஏதேனும் இருக்கிறதா? என்று.

ஒரு பெரும் தியாகத்தைச் செய்தவர்களும் அவர்தம் குடும்பங்களும் ஒதுங்கியிருக்க, இனப் பற்றுடன் தொடர்பில்லாத ஒரு தரப்பினர் அரசியல் பதவிகளில் இருந்து கொண்டு தமிழினத்தின் அரசியல் உரிமைகளைத் தாரைவார்ப்பதை பொறுத்துக் கொள்ள முடியாத கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவைக்கு உயிர்கொடுத்தவர் நீதியரசர் விக்னேஸ்வரன் என்பதை அதனூடு சம்பந்தப்பட்டவர்களில் நானும் ஒருவன் என்பதன் காரணமாக, அதனை எந்த இடத்திலும் எழுந்து நின்று சத்தியப்படுத்த யாம் தயாராகவே இருக்கின்றோம்.

ஆம், உண்மை ஒன்றாகவும் அதன் வெளிப்படுத்தல் வேறொன்றாகவும் இருப்பதை நாம் ஒரு போதும் அனுமதிக்க முடியாது. அது தர்மமன்று.

தமிழ்மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்ட போது நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இருந்தவர். தமிழ்மக்களின் நன்மை கருதி ஆரம்பிக்கப்படுகின்ற தமிழ் மக்கள் பேரவை அவசியமானது என்பதை உணர்ந்தவர்.

பேரவையின் இணைத்தலைவராக இயங்குவதால் தனக்கு ஏற்படக்கூடிய உள்ளக இடையூறுகளை அவர் உணராதவரும் அல்ல.

அவ்வாறிருந்தும் தமிழ் மக்களின் நலனுக்காகக் குரல் தரவல்ல மக்கள் இயக்கம் அவசியம் என்பதை ஏற்றுக் கொண்டதாலும் அவ்வாறானதொரு அமைப்பு இல்லையெனில், அதன் விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும் என்பதை உணர்ந்து கொண்டதாலும் தமிழ்மக்களின் இயக்கமென எழுந்த பேரவையில் அவர் இணைத்தலைமையை ஏற்றுக் கொண்டார்.

நான் கேட்பதெல்லாம் தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கம் கண்டு வெகுண்டெழ வேண்டிய தேவை என்ன? என்பதுதான்.

தமிழ்மக்கள் பேரவை எழுக தமிழ் என்ற மாபெரும் எழுச்சிப் பேரணியை முதல் தடவை நடத்திய போது, அந்தப் பேரணிக்குப் போகாதீர்கள் என்று கூறியவர்கள் இந்தத் தமிழ் மண்ணில் இருப்பார்கள் என்றால், அவர்களை விட்ட பிரகிருதிகள் யார் இருக்க முடியும்.

தமிழினத்தின் உரிமைக்காக, காணாமல் போனவர்களுக்காக, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக, எங்கள் மண் ஆக்கிரமிக்கப்படுவதை எதிர்ப்பதற்காக, எம் மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்காக நடத்தப்பட்ட எழுக தமிழ் எழுச்சிப் போராட்டத்தைக் குறைகூறுபவர்கள், அதனைக் குறைத்து மதிப்பிட்டவர்கள் தமிழ்மக்களின் நலன் சார்ந்தவர்கள் என்று கூறமுடியுமா? என்ன.

மக்கள் இயக்கமாகிய தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைமையை நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் ஏற்றுக் கொண்டார் என்பதற்காக அவருக்கு வடக்கு மாகாண சபையில் இழைக்கப்பட்ட அநீதிகள் கொஞ்சமல்ல.

நக்கல் நளினம், கடிதங்கள் தயாரித்தல், கள்ளக் கையெழுத்திடுதல், கூச்சல் குழப்பம் என ஏகப்பட்ட தொந்தரவு செய்தவர்கள் இன்னமும் இந்த மண்ணில்தான் இருக்கிறார்கள். நான் அவர்களிடம் கேட்பது, அன்புச் சகோதரர்களே! தமிழ்மக்களின் வாக்குகளைப் பெற்று வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களாகச் சென்ற நீங்கள், மாகாண சபை அமர்வுகளிலும் ஹோட்டல்களிலும் கூடி முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராகச் செய்த சதிகள் நியாயமானவையா? என்பதை உங்கள் நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள்.

வடக்கின் முதலமைச்சராக இருந்த நீதியரசர் நீங்கள் அணுக முடியாத ஒருவரா அல்லது அவர் நீதியற்ற முறையில் நடந்தவரா, ஊழல் புரிந்தவரா இல்லையே. அப்படியானால் எதற்காக அவரை எதிர்த்தீர்கள். அந்த எதிர்ப்பின் பின்னணியோடு இன்றைய சமகாலத்தை ஒப்பிட்டுப் பாருங்கள். உங்களுக்குள் இருக்கக்கூடிய ஒற்றுமையீனத்தை, கழுத்தறுப்பை ஒருமுறை சிந்தித்துப் பாருங்கள்.

உங்கள் கட்சித் தலைமையைக்கூட தேர்தல் விளம்பரங்களில் பிரசுரிக்க முடியவில்லையல்லவா? அவரின் விருப்பு எண்ணை விளம்பரப்படுத்த நீங்கள் தயாரில்லையல்லவா ஏன்?

அன்று நீதியரசர் விக்னேஸ்வரனை எதிர்ப்பதற்காகச் சதித்திட்டம் தீட்டுவதில் மட்டுமே உங்கள் ஒற்றுமை இருந்ததே தவிர, உங்களிடம் கட்சி விசுவாசம் இருக்கவில்லை. கட்சித் தலைவனை மதிக்கின்ற மாண்பு இருக்கவில்லை.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தீர்களே. உங்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையைப் பெற்றுக் கொள்வதற்காக வடக்கின் ஆளுநர் அலுவலகம் சாமத்திலும் திறந்திருந்ததே. இதெல்லாம் சரியா? என்று ஒரு கணம் உங்கள் இதயத்தைத் தொட்டுக் கேளுங்கள். மாகாண சபைத் தேர்தல் முடிந்த கையோடு தமிழர் அரசு மலர்ந்தது என்று தமிழ் மக்கள் நாம் புளகாங்கிதம் அடைந்தோமே.

ஆனால் நீங்கள் செய்தது நீதியரசர் விக்னேஸ்வரனை வெளியேற்றிவிட்டு, அந்த ஆசனத்தில் அமர முயற்சித்தது தானே. இது சரியானதா? கடவுளுக்கு நீதியானதா?

(தொடரும்)

**புருசோத்தமன்**

# கொரோனாத் தொற்று காரணமாக வேலையிழந்தவர்கள் கணக்கெடுப்பு

(கொழும்பு)

கொரோனாத் தொற்று காரணமாக வேலையிழந்தவர்கள் குறித்து கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

உற்பத்தி, வருமானம் மற்றும் கிருமிநாசினிகளுக்கான செலவுகள் மற்றும் பிற தொடர்புடைய செலவுகள், ஆட்டோக்கள் மற்றும் பிற டாக்ஸி சேவைகளின் சாரதிகள் குறித்து இதன் போது அவதானம் செலுத்தப்படவுள்ளது.

கணக்கெடுப்பை ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்குள் நடத்தி முடிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.அத்துடன், செப்டெம்பர் மாதத்திற்குள் அது பகிரங்கப்படுத்தப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2020ஆம் ஆண்டிற்கான வேலையின்மை குறித்து திணைக்களம் வெளியிட்டுள்ள ஆண்டு அறிக்கையிலேயே, நாட்டில் தற்போது சுமார் நான்கு இலட்சத்து 80 ஆயிரம் பேர் வேலையில்லாமல் உள்ளமை தெரியவந்துள்ளது. (ஐ-4)

## ஆன்மீகம்



### ஒரு கோணம் பல பார்வைகள்...!

( தொடர்ச்சி)

காணுகிற கண்கள் நமக்கு இருந்தால் போதும். அனைத்தும் கடவுளாகவே தெரியும் என்கிற பாரதியார் இப்படிப் பாடுகிறார்:

**'காக்கைச் சிறகினிலே**
**நந்தலாலா நின்றன்**
**கரிய நிறம் தோன்றுதையே**
**நந்தலாலா!**
**பார்க்கும் மரங்களெல்லாம்**
**நந்தலாலா நின்றன்**
**பச்சை நிறம் தோன்றுதையே**
**நந்தலாலா!**
**கேட்கும் ஒலியில் எல்லாம்**
**நந்தலாலா நின்றன்**
**கீதம் இசைக்குதையே**
**நந்தலாலா**
**தீக்குள் விரலை வைத்தால்**
**நந்தலாலா நின்னைத்**
**தீண்டும் இன்பம்**
**தோன்றுதையே நந்தலாலா!**

ஆக்கபூர்வமான சிந்தனைகளே நம் அகத்திற்குத் தேவையானது. எதிர்மறைச் சிந்தனைகள் இதயத்தில் நுழைய ஒருபோதும் இடம் கொடுக்கக்கூடாது. வேலைக்கு ஏற்ற ஆட்களைத் தேர்வு செய்ய நிறுவனம் ஒன்று நேர்காணல் நிகழ்த்தியது.

பல இளைஞர்கள் பங்குபற்றினர். வேலை கிடைப்பதுதான் குதிரைக் கொம்பாக இருக்கிறதே! ஒரு கவிஞர் பாடுகிறார்: 'வேலை வாய்ப்பு என்னும் கழுதைக்கு எத்தனை பட்டக் காகிதங்களைக் கொடுத்தாலும் பசி தீர்வதில்லை.' பட்டம் பெற்ற பலர் நேர்முகத்தேர்விற்கு வந்தனர்.

இறுதிச்சுற்று வரை இரு பட்டதாரிகள் வந்தும் ஒருவருக்குத்தான் வேலை. ஒரு இளைஞனை அழைத்து 'உங்களுக்கு இந்த வேலை கிடைக்கவில்லை என்றால் எப்படி உணர்வீர்கள்?' என்று அதிகாரிகள் கேட்டனர்.

'நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்' என்றான் அவன், அடுத்த இளைஞனை அழைத்து அதே கேள்வியைக் கேட்டார்கள். 'நீங்கள் கொடுத்து வைத்தது அவ்வளவு தான்!' என்றான் அவன். 'நீங்கள் வேலையில் சேரலாம்' என்றனர் அதிகாரிகள்.

உடன்பாடான எண்ணங்களே உன்னதத்தைப் பெறுவதற்கான உத்தரவாதங்கள். ஒருமுறை கண்ண பெருமான் தருமனையும், துரியோதனனையும் நோக்கி 'ஊரார் பற்றிய விபரங்களை எடுத்துக் கூற வேண்டும். ஒன்றாகச் சென்று இருவரும் அறிந்து வாருங்கள்,' என்றார். ஒன்றாகச் சென்றதால் இருவரும் பார்த்த இடங்களும், காட்சிகளும் ஒன்றே! திரும்பி வந்தார்கள்.

'கிருஷ்ணா! ஊர் மக்கள் அனைவருமே வஞ்சகம் நிறைந்தவர்கள்' என்றான் துரியோதனன். 'இல்லை, கிருஷ்ணா! எல்லோரும் நல்லவர்கள் தான்' என்றான் தருமன். கண்ண பிரான் சொன்னார்: 'நம் உள்ளத்தில் உலவும் எண்ணங்கள்தான் உலகத்தில் எதிரொலிக்கிறது.

தீய எண்ணத்தோடு பார்த்தால் எல்லாம் தீமையே!' விரிந்து விளங்கும் வெண்ணிலா வட்டத்தில் களங்கத்தை மட்டுமே பார்ப்பது நம் கண்ணின் குறைதானே! சாக்கடையிலும் அறிஞன் நீலவானத்தைப் பார்ப்பான் என்கிறார் எமர்சன் என்னும் மேல்நாட்டு மேதை!

ராஜா வீட்டுப் பையன்போல் ரோஜாச்செடி ஒன்று மந்தகாசமாக மலர்ந்து சிரிக்கிறது. 'முட்களிடையே இப்படி ஒரு மோகன மலரா' எனப் பார்ப்பவர் மகிழ்ச்சி அடைகிறார்.

'ஒரு மலரைச்சுற்றி இத்தனை முட்களா' என இன்னொருத்தர் வருத்தம் அடைகிறார். இலையே இல்லாக் கிளையைக் கூட கலையின் ஊற்றுக்கண்ணாக ரசிக்கும் மாற்றுக் கண்ணே நம் மனத்திற்குத் தேவை!

## செய்தித்துளிகள்

### தேர்தல் தொடர்பில் 5400 முறைப்பாடுகள்

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இதுவரையில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதன் அடிப்படையில் இதுவரையில் 5400 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. எவ்வாறாயினும் ஒரு வன்முறைச் செயல் கூட இதுவரை பதிவாகவில்லை எனத் தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-4)

### சுற்றிவளைப்பில் 237 பேர் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் போதைப்பொருள் மற்றும் வேறு குற்றச்சாட்டு தொடர்பில் 237 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஹெரோயின் போதைப்பொருளை கைவசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 114 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். குறித்த நபர்கள் வெல்லம்பிட்டிய, பொரளை, கிராண்பாஸ், புறக்கோட்டை மற்றும் பாணந்துறை தெற்கு பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

### இலங்கை பணியாளர்கள் மீது திட்டமிட்டு தாக்குதல் நடத்தப்படவில்லை

(அம்மான்)

ஜோர்தானில் இலங்கைப் பணியாளர்கள் மீது திட்டமிட்டு தாக்குதல் நடத்தப்பட்டிருக்கவில்லை என இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஜோர்தானில் சிக்கியுள்ள இலங்கையர்கள் சிலர், அல்பராக் கைத்தொழில் நகரில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளை சந்திக்க சென்ற வேளையில் அவர்கள் மீது கண்ணீர் புகைப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.இந்நிலையில், இந்த தாக்குதல் தங்களது கட்டளையின் அடிப்படையிலோ அல்லது முன்கூட்டியே திட்டமிட்டோ இடம்பெறவில்லை என அங்குள்ள இலங்கைத் தூதரகம் விளக்கமளித்துள்ளதாக, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (ஐ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 160 | 160 |
| பச்சைமிளகாய் | 240 | 200 | 300 |
| தக்காளி | 60 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 80 |
| கோவா | 120 | 130 | 120 |
| கரட் | 120 | 140 | 160 |
| பூசணி | 50 | 40 | 60 |
| புடோல் | 50 | 80 | 80 |
| வாழைக்காய் | 180 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 130 | 160 | 150 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 100 |
| பாகற்காய் | 120 | 160 | 160 |
| வெண்டிக்காய் | 50 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 120 | 130 | 150 |
| பயற்றங்காய் | 100 | 120 | 120 |
| லீக்ஸ் | 60 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 200 | 220 | 300 |
| முருங்கைக்காய் | 140 | 140 | 100 |
| போஞ்சி | 180 | 230 | 240 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 40 |
| தேசிக்காய் | 200 | 160 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 55 | 60-80 |
| இராசவள்ளி | -- | -- | -- |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 20 |
| ஈரப்பலா | 50 | 80 | 50 |




## மகா கஞ்சனிடம் பரிசு பெற்ற புலவர்

டில்லி நகரின் முக்கியமான ஒரு வீதியில் பெரிய பணக்காரன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் கஞ்சனுக்குக் கஞ்சன். உயிரே போனாலும் கூட பிறருக்கு ஒரு சல்லி காசுகூடக் கொடுக்க மாட்டான்.

ஒருவேளைசமையல்செய்து மூன்று வேளைக்கு வைத்துக் கொள்வான். எப்பொழுதும் ஒரே உடையைத் தான் உடுத்துவான். அழுக்குப் போக சோப்புப் போட்டுத் துவைத்தால் துணி கிழிந்துவிடும் என்று துவைக்காமலேயே உடுத்திக் கொள்வான்.

அந்தத் தெருவில் கஞ்சனின் வீடு பெரியமாளிகையாக இருந்தமையால் இந்த வீட்டுச் செல்வந்தரைப் புகழ்ந்து கவி பாடினால் கணிசமான பரிசு கிடைக்கும் என எண்ணி கஞ்சன் வீட்டில் நுழைந்தார் புலவர்.

தன்னை அவனிடம் அறிமுகப்படுத்திக்கொண்டு கஞ்சனின் பெயரை கேட்டுத் தெரிந்து கொண்டு அவனைப்புகழ்ந்து பாடல்கள் பாடி வாழ்த்தினார். புலவரின் பாடலில் மனம் மகிழ்ச்சிய டைந்தான் கஞ்சன். ஆனால் அவருக்கு எந்தப் பரிசும் அளிக்கவில்லை.

புலவரே தங்களின் பாடல்களினால் உள்ளம் மகிழ்ச்சியடைந்தமைக்கு மிக்க நன்றி. தங்களுக்கு ஏதாவது பரிசு அளிக்க வேண்டியது எனது கடமை. ஆகையினால் நாளைக்கு வந்தால் என்னால் இயன்ற பரிசைத் தருகிறேன் என்றான் கஞ்சன். மறுநாள் புலவர் வந்தார்.

கஞ்சன் புலவர் வந்ததைக் கண்டும் காணாமல் அங்கு வந்திருந்த ஒருவரிடம் பேசிக் கொண்டி ருந்தான்.

பல மணி நேரம் கடந்தும் கவனிக்காதது போல இருந்தான். சிறிது நேரம் கழித்து புலவரை அழைத்து, இப்போது ஒருவரிடம் முக்கியமான விடயம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன்.

இப்போது எதுவும் செய்ய இயலாது. ஆகையினால் நாளைக்கு வாருங்கள் ஏதாவது பரிசு தருகிறேன் என்றான் கஞ்சன்.

மனம் தளராது மறுநாளும் கஞ்சன் வீட்டிற்குச் சென்றார் புலவர்.புலவரைக் கண்டதும் பரிசு தருகிறேன் என்று சொன்னால் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்ற கட்டாயம் ஏதாவது இருக்கிறதா? பரிசு ஒன்றும் தர முடியாது. இனி வந்து தொந்தரவு கொடுக்காதீர்கள் என்றான் கஞ்சன்.

ஒன்றும் பேசாமல் மன சஞ்சலத்துடன் புலவர் திரும்பி விட்டார். அடுத்த நாள் பீர்பாலைச் சந்திக்கச் சென்றிருந்தார்.

ஏற்கனவே புலவரின் புகழைக் கேள்விப்பட்டிருந்தமை



யால் அவரை அழைத்து மனம் விட் டுப் பேசிக் கொண்டிருந்தார் பீர்பால்.

பேச்சின் இடையே பீர்பாலிடம் கஞ்சனின் செய்கையைக் கூறி மனம்வருந்தினார் புலவர். தங்களை இழிவுபடுத்தியவனுக்கு நான் சரியான பாடம் புகட்டுகிறேன்.

தயவு செய்து தாங்கள் அவனது இல்லத்திற்குச் சென்று, இன்று இரவு பீர்பால் அவர்கள் வீட்டில் விருந்திற்கு ஏற்பாடு செய்துள்ளார். தங்களின் முக்கிய விருந்தினராக வரவேற்று அழைப்பதாகக் கூறுங்கள் என்றார்.

மறுநாள் புலவர் கஞ்சன் வீட்டிற்குச் சென்று பீர்பால் விருந்திற்கு அழைத்த செய்தியைக் கூறினார். பீர்பாலின் அழைப்பைக் கண்டு பெரு மகிழ்ச்சி கொண்டான்.

தன்னை மதித்து அழைப்பதனால் நமக்கு ஏதாவது சிறப்பு செய்து பெருமைப்படுத்துவார்கள் என்று நினைத்து விருந்திற்கு வருவதாக புலவரிம் கூறினான் கஞ்சன்.

அன்று இரவு கஞ்சன் விருந்திற்கு வருவதற்கு முன்னதாகவே பீர்பாலும் புலவரும் சாப்பிட்டு விட்டு கஞ்சன் வரவிற்காகக் காத்திருந்தனர். புலவருக்கு கஞ்சன் செய்தது போலவே பீர்பாலும் கஞ்சனிடம் நடந்து கொண்டார்.

அப்போதுதான் கஞ்சனுக்குப் புரிந்தது. புலவரைக் கடுமையாகப் பேசி ஏமாற்றி அவமானப்படுத்தியதற்கு பீர்பால் தமக்குப் பாடம் புகட்டியுள்ளார் என்பதை உணர்ந்து கொண்டான்.

உடனே கஞ்சன். மதிப்பிற்குரிய பீர்பால் அவர்களே. புலவருக்குச் செய்த தவறை மன்னியுங்கள். புலவர் அவர்களே. நான் சொல்லியபடி எனது பரிசாக இந்தத் தங்க மோதிரத்தை அளிக்கிறேன். மறுக்காமல் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கையில் அணிந்திருந்த தங்க மோதிரத்தைக் கழற்றி புலவருக்கு அளித்தான் கஞ்சன்.

**நீதி: யாரையும் ஏமாற்ற நினைக்கக்கூடாது.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## ஆயிரத்தில் ஒருவன்

22

நிஜம்தான். ராஜராஜன் காலத்தில் பலம்வாய்ந்த மூன்றுவகைப் படைகள் இருந்தன. அவை யானைப் படை, குதிரைப்படை, காலாட்படை என்பன. இவை தவிர கப்பற்படையும் ராஜராஜனின் சிறந்த போர் ஆயுதமாக விளங்கியது.

அம்பாசமுத்திரத்தில் கிடைத்த ஒரு கல்வெட்டொன்று ராஜராஜன் போர்ப்படை எவ்வாறு செயற்பட்டது என்பதைப் பொருத்தமாக விளக்குகிறது.

மூன்று மகா சேனை வீரர்கள் (அதாவது மூன்று அங்கங்களைக் கொண்ட பெரும் சேனை என்று அர்த்தம்) விஷ்ணுவையும் சிவபெருமானையும் வழிபட்டனர். கன்னர தேவனைத் தோற்கடித்துத் துரத்தினர். காங்கேயனைக் கொன்றனர்.


நவகண்டம்

கடல் கடந்து கிழக்குத் திசை நோக்கிச் சென்று மாதோட்டத்தை அழித்தனர். மலைநாட்டைக் கைப் பற்றினர். வள்ளன் என்ற சாளுக்கியரை ஓட ஓட விரட்டினர்.

வனவாசி நகரைக் கைப்பற்றினர். தங்களை எதிர்த்த வடுகர்களை முறியடித்தனர். வாதாபிக் கோட்டையைத் தகர்த்து அந்நகரைக் கைப்பற்றினர். இவர்கள் மூவகையான சேனையைச் சேர்ந்த அஞ்சாநெஞ்சம் படைத்த வீரர்கள்.

கடற்படை, உள்நாட்டின் படை ஆகிய அனைத்துப் படைகளுக்கும் ராஜராஜனே தலைவராக இருந்தார். ராஜராஜனின் எழுபது போர்ப்படைகளின் விபரங்கள் கல்வெட்டுக்களில் இடம்பெற்றுள்ளன.

மூன்று கை மகாசேனை, காலாட்படை என்று போருக்கேற்ற விதவிதமான போர்ப்படைகள் உருவாக்கப் பட்டன. ராஜராஜனின் போர் வீரர்கள் அவர் மேல் அபாரமான பிரியமும் விசுவாசமும் கொண்ட வர்களாக இருந்தார்கள். நவகண்டம் கொடுப்பது என்பது சோழர் காலத்தில் நடைமுறையில் இருந்த ஒரு யதார்த்தம்.

சோழ அரசர்களுக்காக ராஜவிசுவாசிகள் நவகண்டம் என்ற பெயரில் தம்மைத்தாமே பலியிட்டுக் கொள்வது சோழர் வரலாற்றில் பலமுறை நிகழ்ந்துள்ளது.

கல்வெட்டுடன் கூடிய ஒரு சோழர்கால நவகண்டச் சிற்பம் ஒன்றில் இது குறித்த ஒரு சம்பவம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் பொன்னி மகன் பிழைக்க என்று பொறிக்கப்பட்டுள்ளது.

மரணத் தறுவாயில் உள்ள அரசரின் உயிர் பிழைக்க வேண்டும் என்பதற்காக நேர்ந்து கொண்டு தன்னுயிரைப் பலி கொடுத்த ஒரு ராஜவிசுவாசி சிற்பம் அது (இந்தக் கல்வெட்டு, தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் தஞ்சை மராட்டா தர்பார் அகழ் வைப்பகத்தில் வைக்கப் பட்டுள்ளது)

(தொடரும்)

# நாடு ராஜபக்ஷக்களின் பரம்பரைச் சொத்தல்ல

(கொழும்பு)

**இந்த நாடு மகிந்த ராஜபக்ஷக்களின் பரம்பரை சொத்தல்ல. பரம்பரை அரசியல் என்பதை ஒருபோதும் அனு மதியோம் என கலகொட அத்தே ஞானசார தேரர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**



மாத்தளை நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

பரம்பரை அரசியல் என்பதை ஒருபோதும் அனுமதியோம். இந்த நாட்டுக்கு ஒரு நல்ல தலைமைத்துவம் தேவைப்பட்டது.

அதுவும் பௌத்த நாடான இந்த நாட்டையும், பௌத்தர்களையும் பாதுகாக்கும் சுத்தமான ஒரு பௌத்தனின் தேவை எமக்குத் தேவைப்பட்டது.

எதற்கும் அசைந்து கொடுக்காது எந்த அடிப்படைவாதத்திற்கும் அடிபணியாத நல்ல பௌத்த தலைவன் தேவைப்பட்டதால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தனி பௌத்த மக்களின் வாக்குகளோடு நாம் கோட்டாபய ராஜபக்ஷவைத் தெரிவு செய்தோம்.

இதற்கு மூலகர்த்தாக்கள் நாம் தான் என்பதை மிகவும் ஆணித்தரமாக கூறிக் கொள்கி றேன் என அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது இந்த நாட்டு பௌத்தர்கள் ஓரணியாக திரண்டு கலப்படம் இல்லாத ஒரு நாடாளுமன்றத்தை உருவாக்க முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# சர்வதேச விமானப் போக்குவரத்து இயல்பு நிலைக்கு திரும்ப நான்கு ஆண்டுகளாகும்

(கொழும்பு)

தற்போதுள்ள நெருக்கடியான சூழ்நிலையில், சர்வதேச விமானப் போக்குவரத்து இயல்பு நிலைக்குத் திரும்ப நான்கு ஆண்டுகள் ஆகும் என சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கம் தகவல் வெளியிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் காரணமாக உலகின் பல்வேறு நாடுகளில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் தொழில், வணிகம், சுற்றுலா என அனைத்துத்துறைகளும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக சர்வதேச விமான சேவைகள் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலான நாடுகள் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு விமான சேவைகளுக்கு தடை விதித்துள்ளது. இந்த நடவடிக்கைகளால் விமான நிறுவனங்கள் பெரும் நட்டத்தை சந்தித்து வருகின்றன.

இந்த நட்டத்தை ஈடுகட்டும் விதமாகவும் நிதி நெருக்கடியை சமாளிக்கும் விதமாகவும் விமான நிறுவனங்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

அவற்றில், ஊழியர்கள் பணி நீக்கம், ஊழியர்களுக்கு சம்பளமற்ற விடுப்பு, பணி நேரத்தை அதிகரித்தல், சம்பளமற்ற பணி வழங்குதல் என பல்வேறு அதிரடி முடிவுகளும் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மலையகத்தில் கனமழை; நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் உயர்வு



(கண்டி)

நாட்டின் சில இடங்களில் கனமழை பெய்து வருகின்றமையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் மலையக பகுதிகளில் உள்ள சிற்றாறுகள், அருவிகள் மற்றும் நீர் வீழ்ச்சிகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளமையால் மேல் கொத்மலை, காசல்ரீ, மவுசாக்கலை, கெனியோன், லக்சபான, நவலக்சபான, பொல் பிட்டி மற்றும் விமலசுரேந்திர ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

அத்துடன் அப்பகுதிகளில் பலத்த காற்று வீசுவதால் மரங்கள் முறிந்து விழும் அபாயம் தோன்றியுள்ளதால் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



## கண்டி வீதி...

வயதான தங்கராசா சந்துரு என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் வெளிநாடொன்றில் இருந்து தற்சமயம் நாடு திரும்பியவர் எனவும் கொரோனா நிலைமை காரணமாக மீளவும் வெளிநாடு செல்ல முடியாத நிலையில் சொந்த ஊரில் வசித்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணையை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3, 30)

## 33 கிலோ கஞ்சா...

ருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் பாவனையில்லாத கட்டடத்தில் விற்பனைக்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த 33 கிலோ கஞ்சாவுடன் இளைஞன் ஒருவர் நேற்று யாழ்ப்பாண பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

36 வயதுடைய புத்தளம் பகுதியைச் சேர்ந்த நபரே பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவருடன் பழைய கட்டடம் ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 33 கிலோகிராம் கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளது. (ம-3,9,32)

## வீடு தேடிச்...

வேலை செய்யும் வீட்டுக்குச் தேடிச் சென்ற கணவர் சித்திவதையின் பின் கத்தியால் குத்தி படுகாயப்படுத்தியுள்ளார்.

படுகாயமடைந்த 2 பிள்ளைகளின் தாயார் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குப்பிளான் பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக அவரது கணவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஊரெழுவைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தாயாரான 34 வயதுடைய குடும்பப் பெண் கணவனைப் பிரிந்து வாழ்ந்து வருகிறார்.

அவர் குப்பிளான் பகுதியில் வீடொன்றில் முதியவரை பராமரிக்கும் வேலையில் வாழ்வாதாரத்துக்காக ஈடுபட்டு வருகிறார்.

இந்த நிலையில் குறித்த பெண் பணிபுரியும் வீட்டில் முதியவர் சுன்னாகம் பகுதிக்குச் சென்றிருந்த நிலையில் அந்தப் பெண் மட்டும் வீட்டில் தனித்து இருந்துள்ளார்.

அதன் போது அங்கு சென்ற கணவர் மனைவியின் தலைமுடியை வெட்டி எறிந்து முகத்தில் கத்தியால் கீறி சித்திர வதை செய்துள்ளார்.

அத்தோடு கத்தியால் வெட்டியும் உள்ளார். சம்பவத்தில் குடும்பப் பெண் அதிகளவு குருதி வெளியேறி அவதிப்பட்ட நிலையில் அயலவர்களால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த சுன்னாகம் பொலிஸார் அந்தப் பெண்ணை வெட்டி காயப்படுத்திய குற்றச்சாட்டில் அவரது கணவரைக் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர். (ம-3-18)

# ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு தேர்தலின் பின் வேலைவாய்ப்பு

## ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு



(களுத்துறை)

பொதுத் தேர்தலின் பின்னர் பட்டதாரிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்டத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்த ஜனாதிபதி மேலும் கூறுகையில்,

அரச சேவையில் 15 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் உள்ளனர். எனினும் சேவைகளை பெற்றுக் கொள்வதில் மக்கள் முகங்கொடுத்துவரும் பிரச்சினைகள் குறித்து நாளாந்தம் தகவல்கள் வருகின்றன. எனவே ஊழல், மோசடிகளை ஒழித்து வினைத்திறனான அரச சேவை ஸ்தாபிக்கப்படும்.

பட்டதாரிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் தொழில்களைவழங்குதல் தேர்தலின் பின்னர் இடம்பெறும். இந்த அனைத்து சந்தர்ப்பங்களும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவும் என்றார். (ம-3)

## விரைவில் மீண்...

கொரோனா தொற்று மிகவும் பாரிய உலக சுகாதார அவசரகால நிலை என உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் எபோலா, ஸிகா, போலியோ மற்றும் பன்றிக்காய்ச்சல் போன்ற நோய் தொற்றின்போது பிறப்பிக்கப்பட்ட அவசரகால நிலையை விட இது பாரதூரமானது என உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டாக்டர் ரெட்ரோஸ் அதனம் (Tedros Adhanom) தெரிவித்துள்ளார்.

வைரஸ் தொற்றை கட்டுப்படுத்து வதற்கு சமூக இடைவெளியை பேண வேண்டும் என்பதுடன், முகக்கவசங்களை அணிவது போன்ற சுகாதார நடைமுறைகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-3)


**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-9524)

0768226240

**ENGLISH CLASS**

தரம் 6 - 11 வரையான வகுப்புக்கள்

- Personal Class (வீடு வந்து கற்பிக்கப்படும்)
- Group Class (Reading, Grammar, Writing) மிகவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். (3440)

Contact No: 076 217 6366

**பணிப்பெண் தேவை**

சண்டிலிப்பாயில் உள்ள வீடொன்றில் 77 வயதுடைய வயோதிபப் பெண்ணொருவரை தங்கி நின்று பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.

தகுந்த சம்பளம் வழங்கப்படும் (3439)

தொடர்புகளுக்கு: 00447438453457 யோசேப் தவசீலன் (Viber Call)

E-mail : tjoseph74@hotmail.com

**கண்ணீர் அஞ்சலி**



அமரர் வைத்திய கலாநிதி

**கபிரியேல் எட்வேட்**

எமது சங்கத்தின் அங்கத்தவரும் ஆயுர்வேத சமூக மருத்துவ உத்தியோகத்தர், நல்லூர் வைத்திய கலாநிதி எட்னா அவர்களின் அன்புத் தந்தை வைத்திய கலாநிதி கபிரியேல் எட்வேட் அவர்களின் பிரிவுத்துயரில் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரச சித்த வைத்திய அதிகாரிகள் சங்கம் இலங்கை

(3441)

**PHOENIX ENGLISH ACADEMY**

No.262/1 power house road, jaffna. (near topaz textile)

2020 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதர (O/L) பரீட்சை எழுத விருக்கும் மாணவர்களுக்கான ஆங்கிலப் பாடத்திற்கான செயலமர்வும் கருத்தரங்கும்

இடம்: இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம் யாழ்ப்பாணம்

காலம்: 03.08.2020 (திங்கட்கிழமை)

நேரம்: 8.30-12.30 வரை

(C-9970)

நுழைவுக்கட்டணம்: 250/- (கையேடு மற்றும் குளிர்பானம் வழங்கப்படும்)

பாடத்திட்டம்: Prepositions

Writing Notice And Note

Discribing Bar Chart And Pie Chart

வளவாளர்கள்: Mr.E.Rajan (Batticaola)

Ms.T.Thliaxci (Jaffna)

Mrs.R.Jenshaleema (Trincomale)

முற்பதிவுகளுக்கும் மேலதிக தகவல்களுக்கும்

Call: 076 090 9261

ஒழுங்கமைப்பு: இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்- யாழ்ப்பாணம்

**ஜாதிக சம்பத**

சீட்டிழுப்பு திகதி 29-07-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1041

A 9 5 2 1 4 5

**கொவிசெத**

சீட்டிழுப்பு திகதி 29-07-2020 சீட்டிழுப்பு இலக்கம் 2493

Y 07 41 74 80

**மஹஜன சம்பத**

திகதி 2020/07/29 சீட்டிழுப்பு இலக்கம் 4198

O 4 4 4 7 4 8

**மெகா பவர்**

திகதி 29/07/2020 சீட்டிழுப்பு இலக்கம் 565

I 08 13 35 38 70

**செவன**

திகதி 29/07/2020 சீட்டிழுப்பு இலக்கம் 282

Q 18 23 24 61

**சம்வர்தன வாசனாவ**

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி வாரம் 353 திகதி 29.07.2020 வர்ணம் நீலம்

H 42 43 68 3

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 56,091,428

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர். தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

**ராசி**

வெற்றி வாரம் 2876 வர்ணம் பச்சை திகதி 29.07.2020

வெற்றி இலக்கங்கள் 25 38 42 45 கும்பம்

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 3,509,066

6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

**அத கோடிபதி**

சீட்டிழுப்பு இல: 995 வர்ணம் : இளஞ்சிவப்பு சீட்டிழுப்பு திகதி 2020.07.29

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 56,108,945/-

வெற்றி இலக்கங்கள் 20 24 38 46 R

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

சீட்டிழுப்பு இல.: 3344 திகதி: 2020.07.29 ஊதா புதன்கிழமை

வெற்றி இலக்கங்கள் 08 13 29 49 B

அடுத்த சனிக்கிழமை ஜக்பொட் ரூ. 34,895,020.50

தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

பொய் சொல்பவன் அதில் தனக்கு வெற்றி கிடைக்க வில்லை என்று வருந்துகிறான். பொய் சொல்வதற்கு முன்பு பிறரை வஞ்சிக்கத் திட்டம் தீட்டுகிறான்.
– மகாவீரர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொதுமக்கள் விழிப்பாக இருக்க வேண்டிய நேரம்

பாராளுமன்றத் தேர்தலின்போது வடக்கு மாகாணத்தில் விசேட கவனம் செலுத்தப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய கூறியிருப்பது மிகுந்த ஆறுதலைத் தருகிறது.

பொதுவில் தேர்தல்கள் நியாயமாகவும் நீதியாகவும் நடத்தப்பட வேண்டும் என்பதுடன் கட்சிக்கான வாக்குகள் எண்ணப்பட்டு – உரிய விருப்பு வாக்குகள் கணிக்கப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் வரையில், அத்தனை நடவடிக்கைகளும் செம்மையாக இடம்பெறுவதை உறுதி செய்வதும் கட்டாயமானதாகும்.

தேர்தல் என்பது ஜனநாயகத்தின் அத்திபாரம். மக்கள் வழங்குகின்ற தீர்ப்பு. மக்கள் வழங்கும் தீர்ப்பில் மாற்றம் செய்யப்படுமாயின், தேர்தல் என்பது அர்த்தமற்றதாகி விடும்.

எனவே தேர்தல்கள் நீதியாக நேர்மையாக நடைபெறுவதுடன் எந்தவித நம்பிக்கையீனங்களும் ஏற்படாத வகையில் தேர்தல் கடமைகள் நடந்தாக வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, தேர்தல் காலங்களில் வேட்பாளர்கள் கூறுகின்ற பொய்யுரைகள், போலிக்குற்றச்சாட்டுக்கள், மனிதநேயமற்ற விமர்சனங்கள் என பலவாறான குத்து வெட்டுக்கள் குழப்பங்கள் நடைபெறும்.

இருந்தும் நல்லவர்கள் ஒருபோதும் பிறர் மீது அபாண்டமான பழியைச் சுமத்த மாட்டார்கள். அவ்வாறு அவர்களால் அபாண்டமான பழியைச் சுமத்தவும் முடியாது.

ஆக, இங்குதான் பொதுமக்கள் அரசியல்வாதிகளை எடைபோடத் தெரிய வேண்டியவர்களாக உள்ளனர்.

எதுவும் எப்படியும் பேசலாம். எழுதலாம். கீழ்த்தரமாக விமர்சிக்கலாம் என்ற மனநிலையை உடையவர்கள், தப்பித்தவறிப் பாராளுமன்ற உறுப்பினர்களாகிவிட்டால் நிலைமை என்னவாகும் என்பதைப் பொதுமக்கள் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பச்சை பொய் சொல்பவர்கள், தகவல்களை வேண்டுமென்றே திரிவுபடுத்துபவர்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தால் அவர்களிடம் இருந்து வருகின்ற அத்தனை வார்த்தைகளும் பொய்யாகவும் உருட்டுப் புரட்டாகவுமே இருக்கும்.

இத்தகையவர்கள் நல்லவர்கள் என்ற வகுதிக்குள் அடங்காதவர்களாகி விடுவதுடன் இத்தகையவர்களின் உரைகள் மீதான நம்பகத்தன்மைகளும் குறைவாகவே இருக்கும் என்பதை பொதுமக்கள் கவனத்தில் கொள்வது அவசியம்.

இதற்கு மேலாக சில பொது அமைப்புக்கள் எழுந்தமானமாக – தன்னிச்சையாக அரசியல் கட்சி சார்ந்து அறிக்கை விடுவதற்குத் தயாராக இருப்பதான தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசியல் கட்சிகளை ஆதரிக்கின்ற உரிமைகள் பொது மற்றும் சமூக அமைப்புகளுக்கு இருக்குமாயின், உரிய ஒழுங்கு முறையில் கூட்டங்களைக் கூட்டி அனைத்து அங்கத்தவர்களினதும் கருத்தறிந்து அவர்களின் ஒப்புதல் பெற்றுக் கொண்டே தமது ஆதரவை தெரிவிக்க வேண்டும்.

இதைவிடுத்து தலைவர் தனியாகவும் செயலாளர் தனித்தும் அறிக்கை விடுவதானது தமிழ் மக்களுக்குச் செய்கின்ற பெரும் துரோகத்தனமாகும்.

# பொலிஸ் ஊடகப் பேச்சாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை- றிசாத் எச்சரிக்கை

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு தனது பணம் செலவிடப்பட்டதாக முன்வைக்கப்பட்டுள்ள கருத்தினை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் முற்றாக நிராகரித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'பொலிஸ் ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டதாக தெரிவித்தே சில ஊடகங்கள் இதுகுறித்த தகவல்களை வெளியிட்டுள்ளன. எனினும் இது அப்பட்டமான பொய்.

தேர்தல் நெருங்குகின்ற நேரம் பார்த்து இவ்வாறான ஒரு பொய்யினைச் சொல்வதன் ஊடாக, தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தினை அரசாங்கத்திற்கு பெற்றுக் கொடுப்பதற்கு செய்யப்படுகின்ற ஒரு சதியாகவே இதனைப் பார்க்கின்றோம்.

நான் என்னுடைய ஒரு ரூபாய் பணத்தினையும் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு பயன்படுத்தவில்லை. சஹ்ரான் உட்பட இந்த பயங்கரவாதத்துடன் தொடர்புடைய யாரையும் எனக்கு தெரியாது. ஒருவரைத் தவிர.

இன்சாப் இப்ராஹீம் அஹமட் என்ற வியாபாரியினைத் தவிர வேறு ஒருவரையும் எனக்கு தெரியாது.

இந்த நிலையில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இவ்வாறான ஒரு விடயத்தினைத் தெரிவித்திருந்தால் அதனை அவர் உடனடியாக வாபஸ் பெற்று உண்மையினை இந்த நாட்டிற்கு சொல்ல வேண்டும்.

அவ்வாறு அவர் சொல்லாவிட்டால். ஒரு வாரத்திற்குள் அவர் அதனைச் செய்யாவிட்டால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன" என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# வன்னியில் 61 வாக்கெண்ணும் நிலையங்கள் 4200 பொலிஸார் தேர்தல் பாதுகாப்பில்

## தெரிவத்தாட்சி அலுவலர் தகவல்

(நெளுக்குளம்)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் அளிக்கப்படும்வாக்குகளை எண்ணுவதற்காக வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 61 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதுடன் 4200 பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட அரச அதிபரும் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான சமன் பந்துலசேன தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்னியில் தபால் மூலவாக்குகள் 95 சதவீதம் அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை 12 ஆயிரத்து 480 பேர்தமது வாக்குகளை செலுத்தியுள்ளனர். வன்னியில் இடம்பெயர்ந்த வாக்காளர்களாக 6ஆயிரத்து 278 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 5 ஆயிரத்து 707 மன்னார் மாவட்டத்தை சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். அவர்களிற்காக 25 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்த இடங்களில் வாக்களிப்பின் பின்னர் அனைத்து வாக்குப்பெட்டிகளும்பாதுகாப்பானமுறையில் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு எடுத்து வருவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் இதுவரையில் 78 சிறிய தேர்தல் முறைப்பாடுகளே பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த தேர்தல்களில் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில். முடிவுகளை அறிவித்தோம். இம்முறை வாக்கெண்ணல் செயற்பாடுகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மோசடிகள் இடம்பெறாத வகையிலே இந்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் 18 வாக்கெண்ணும் நிலையங்களும் மன்னாரில் 15, முல்லைத்தீவில் 14 வாக்கெண்ணும் நிலையங்களும், 13 தபால் வாக்கெண்ணும் நிலையங்களும் இடம்பெயர்ந்த வாக்குகள் எண்ணுவதற்கு ஒரு நிலையமுமாக மொத்தம் 61 வாக்கெண்ணும் நிலையங்கள் வன்னியில் அமைக்கப்படும்.

அத்துடன் ஒரு வாக்காளர் எந்தப் பிரதேசத்தில் இருந்தாலும் அங்கிருந்தே வாக்களிப்பதற்கு உரிமுறையில் விண்ணப்பங்களை மேற்கொண்டால் தேர்தல்கள் ஆணைக்குழு அவரது பாதுகாப்பு விடயத்தை கருத்தில் கொண்டு வாக்களிப்பதற்கான உரிமையை ஏற்றுக்கொள்ளும்.

அதற்கமையவே வன்னியிலிருந்து புத்தளம் பகுதிக்கு இடம்பெயர்ந்தவர்களுக்கு வாக்களிப்பதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் அந்த கட்டளை எமக்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனை செயற்படுத்தும் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நாம் இருப்போம் என அவர் தெரிவித்தார். (ஜ-5-299)

## வரலட்சுமி நோன்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் வரலட்சுமி விரத பூசை வழிபாடுகள்நாளை 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து வீதி உலா இடம்பெற்று மாலை 4.30 மணியளவில் காப்புக் கட்டுதல் இடம்பெறும். (4-5-18)

# சத்திய தரிசனம்

## பணியே நிஜமான தியானம்



❖ அன்பு, அமைதி, உண்மை, சேவை இவையே தியானத்தின் அடையாளங்கள். பேச்சில் மட்டுமல்லாமல் அன்றாட வாழ்விலும் இவற்றை செயற்படுத்துங்கள்.

❖ காலத்திற்கு மனிதன் கட்டுப்பட்டே ஆக வேண்டும். நேர ஒழுங்கு மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு நாளும் குறித்த நேரத்தில் குறித்த வேலையைச் செய்யுங்கள்.

❖ கடவுளையே லட்சியமாக சுவாசியுங்கள். அவருக்குள் ஆழ்ந்து விடுங்கள்.

❖ மௌனமாக கண்மூடி அமர்ந்திருப்பதல்ல தியானம். உணர்வால் கடவுளிடம் ஒன்றுவதே நிஜமான தியானம்.

❖ உங்கள் பணியை தியானம் போல் மனம் ஒன்றிச் செய்யுங்கள். அது தான் உயர்ந்த தியானம்.

❖ முதலில் கடவுள், இரண்டாவது உலகம், கடைசியாக நான். இந்த வரிசையில் தான் நம் வாழ்வு அமைந்திருக்க வேண்டும்.

❖ வேண்டுவது அனைத்தையும் கடவுள் வழங்குவார். எனவே, சரியானதைக் கேட்பதில் எச்சரிக்கையாய் இருங்கள்.

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்**

பெரியவிளான், இளவாலை, மாரீசன்கூடல், ஆலடி, மெய்கண்டான், சேந்தாங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.


X
பாராளுமன்றத் தேர்தல் - 2020
X
தமிழ் மக்கள் தேசிய கூட்டணி
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்
நேர்மைமிகு
அரசியல் தலைமையை
உருவாக்க...
ஏற்றமிகு எதிர்கால சந்ததியின்
ஆற்றல்மிகு ஆளுமையை
ஆதரிக்க...
உங்கள் வாக்குகளை
மீன் சின்னத்துக்கு வழங்குங்கள்
6
10
1 2 3 4 5 6 7 8 9 10
நீதியரசர்
சி.வி.விக்னேஸ்வரன்
தவச்செல்வம் சிற்பரன்
யாழ். இந்துவின் மைந்தன்
(Architect மொரட்டுவ பல்கலைக்கழகம்)
புலம்பெயர் தமிழ் உறவுகள்
(C-176)


பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2020
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
TNA
X
நெடுந்தீவு மண்ணின் வாரிசினை
வெற்றி பெறச்செய்வோம்
நிரந்தர அரசியல் உரிமை...
நிலையான அபிவிருத்தி...
நிலத்தினில் தமிழராய் நிமிர்ந்திட...
10
சிவஞானம் சிறீதரன்
M.Ed, B.A, PGDE(Mt), PGDEM, Sp. Tr(Ag)
(C-166)
நெடுந்தீவு மக்கள்
WWW.FACEBOOK.COM/IMSHRITHARAN
WWW.SHRITHARAN.COM


என் கனவு யாழ்
இயற்கை, பௌதீக, ஆளணி வளங்களை மேம்படுத்தல்
“வனஜீவராசிகள், வனவளத் திணைக்களங்கள் சுவீகரித்த காணிகளை மீட்டு மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுத்தமை.”
வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்கங்களினால் கையகப்படுத்தப்பட்டிருக்கும் விவசாய காணிகளை மீள வழங்குவது தொடர்பில் அமைச்சர் ஊடாக அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டு சென்று குறித்த சர்சைக்குரிய காணிகளின் விவகாரம் தொடர்பாக திணைக்களங்களின் அதிகாரத்தை மாவட்ட செயலகம் அல்லது பிரதேச செயலகத்திற்கு வழங்குவதற்கும் அமைச்சரவை தீர்மானத்தை பெற்று கொடுக்கப்பட்டுள்ளது.
சர்ச்சைக்குரிய யாழ்ப்பாணம், கிளிநொச்சி காணிகள்
• கிளிநொச்சி ஆனைவிழுந்தான் வயற் காணி.
• கிளிநொச்சி ஜெயபுரம் தேவன்குளம் வயற் காணி.
• வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம், நாகர்கோவில் காணிகள் வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டமை.
• சரசாலை குருவிக்காடு வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் இடப்பட்ட எல்லைக்கல்.
Nagar Kovil Nature Reserve
X
1
அங்கஜன்
இராமநாதன்
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி - Sri Lanka Freedom Party